விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 16 புதன்கிழமை (28.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 071

## சர்வதேசத்திடம் நீதி கோரி
# வட மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்) ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்க வேண்டும் என வட மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானமானது மாகாணசபையின் அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (23-ம் பக்கம்...)

யாழ். நாவற்குழி பகுதியில்
## கஞ்சா கடத்திய பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் -நாவற்குழி பகுதியில் கஞ்சா போதைப் 24☛

ஏழுமலையானைக் காண
## இந்தியா சென்றார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திடீரென இந்தியாவிற்கு உத்தியோகபூர்வமற்ற தனிப் 24☛

வவுனியா குருமன்காட்டில்
## இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா குருமன்காடு காளி கோவில் வீதி, முதலாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவனின் 23☛

மாகாணசபை உறுப்பினர்
## ரவிகரனை விசாரணைக்கு பொலிஸார் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரனை விசாரணைக்காக முல்லைத்தீவு பொலிஸார் அழைத்துள் 23☛

## மாவட்ட செயலகத்தில் விகாரை; இன நல்லிணக்கத்தை குழப்பும்
உறுப்பினர் சத்தியலிங்கம் கண்டனம்

(குருமன்காடு)

நாங்கள் எந்த மதத்திற்கும் எதிரானவர்கள் அல்லர். எனினும் குறிப்பிட்டவொரு மதத்தை முதன்மைபடுத்தும் செயலை ஏற்றுக்கொள்ளமுடியாதென வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகளை புதிதாக பதவியே 23☛

யாழ்ப்பாண பல்கலைக்கழக
## மருத்துவ பீட மாணவன் வீட்டில் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவன் தனது வீட்டில் உள்ள அறையில் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா உக்கிளாங் 23☛

இனப்படுகொலைக்கு நான் சாட்சியாகவுள்ளேன்
## வடக்கு மாகாண சபை புதிய உறுப்பினர் குகதாஸ் கன்னி உரையில் தெரிவிப்பு
உரையை ஜெனிவாவுக்கு அனுப்பவும் முதலமைச்சர் அவைத் தலைவருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர் சபாரட்ணம் குகதாஸின் கன்னி உரையை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவைக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவைத்தலைவருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மகாண சபை 23☛

தேர்தல் பெறுபேறுகளின்
## கணக்கெடுப்பில் பிழை ஏற்பட்டுள்ளது
மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேறுகளின் கணக்கெடுப்பில் பெரும் பிழை ஏற்பட்டுள்ளது. பட்டியல் மூலமான பிரதிநிதிகள் கணக்கெடுப்பில் முழு அளவில் 23☛

சிரியா இனப்படுகொலையை கண்டித்து
## யாழ். பஸ் நிலையம் முன்பாக நாளை கண்டனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சிரியாவில் நடைபெறும் இனப்படுகொலைக்கு எதிராக நாளை முதலாம் திகதி யாழ்.பஸ்நிலையம் முன்பாக கண்டனப் போராட்டம் ஒன்று தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில்நடைபெறவுள்ளது.

சிரியா கௌடாவில் நடைபெற்று வரும் போரில் பல ஆயிரக்கணக்கில் மக்கள் படுகொலைசெய்யப்பட்டு வருகின்றனர். இதில் அதிகமாக அப்பாவி குழந்தைகளே 23☛

உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுதல்
## மார்ச் 20-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதற்கான தினத்தை மார்ச் மாதம் 20 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்கவே இதனை மேற்கொண் 23☛

உள்ளூராட்சி சபைகளுக்கு
## தெரிவான உறுப்பினர்களின் விபரம் சனி வர்த்தமானியில்

(கொழும்பு)

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 8 ஆயிரத்து 689 உறுப்பினர்களின் பெயர் விபரம் எதிர்வரும் சனிக்கிழமை வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொ 23☛

## பிரதமருக்கு எதிரான சதித்திட்டம் அம்பலமானது
நடவடிக்கை எடுக்க காத்திருக்கும் ரணில்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து நீக்க அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் இரகசிய கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்க 23☛



அமைச்சரவை கூட்டத்துக்கு
## அமைச்சர்களின் வருகை குறைவு

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு வெகுசொற்பமான அமைச்சர்கள் மட்டுமே கலந்து கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வார 23☛

## இலங்கை குறித்து ஜெனிவாவில் பதின்நான்கு உப குழுக்கூட்டங்கள்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் 14 உபகுழுக்கூட்டங்கள் ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இந்த கூட்டங்களில் 23☛

## ரணிலுக்கு எதிரான பிரேரணைக்கு ஜே.வி.பி ஆதரவளிக்கும்: ரத்நாயக்க

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. பி.பி.சி செய்தி சேவைக்கு வழங்கி 23☛



## முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் வாக்குமூலம் பதிவு



(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று நான்கு 24☛

## பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு
கூட்டு எதிர்க்கட்சியும் ஆதரவு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் பட்சத்தில் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக கூட்டு எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் கொழும்பு, பொரளையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி.ரத்நாயக்க இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து 23☛


## எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை மீண்டும் மாற்றம்

(கொழும்பு)

மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் மீண்டும் மாற்றமொன்று இடம்பெறும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க, இந்த மாற்றம் இரண்டு வாரங்களுக்குள் ஏற்படுத் 23☛

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா நாகலிங்கம்



செட்டிச்சோலை அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி இராசம்மா நாகலிங்கம் அவர்கள் 27.02.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-இளையாச்சி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற கனகர்-சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பண்டிதர் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், மயில்வாகனம் மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தவராணி (கொழும்பு), திருமதி உஷாதேவி (ஓய்வுநிலை ஆசிரியை), வேதநாயகன் (அரச அதிபர்-யாழ்ப்பாணம்), கேதீஸ்வரன் (அதிபர்-யா/அருணோதயக் கல்லூரி), திருமதி மனோகரி (ஆசிரியை-யா/யூனியன் கல்லூரி), திருமதி திவாகரி (பொஸ்வானா), திருமதி தயாநிதி, திருமதி Dr.கலாமதி (சிரேஷ்ட விரிவுரையாளர் -மருத்துவபீடம்-யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமானந்தன் (பணிப்பாளர்-சிகிரிவிவிங் மில்-கொழும்பு), புஸ்பராஜா (ஓய்வுநிலை அதிபர்), திருமதி பிரதீபா, திருமதி கலாலோஜினி, முருகமூர்த்தி (ஆசிரியர்-யா/சதானந்த வித்தியாசாலை-அளவெட்டி), திலகுமார் (கணக்காளர்-பொஸ்வானா), பத்மநாதன் (முகாமையாளர்-வனிகா மெடிக்கல்), Dr.முருகானந்தம் (சிரேஷ்ட விரிவுரையாளர்-மருத்துவ பீடம்-யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், வைஷ்ணவி, சாம்பவி, சௌமியன், துவாரகா, வரஜீவி, கோலமுகி, கௌசிகன், கவுணியன், குந்தவி, தர்சனா, கிருஷன், ஹரிகரன், விசாகன், கௌதமன், நிவேதனா, வியாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சகஸ்ரா, சாத்விகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2018) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 11.30 மணியளவில் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டிச்சோலை,**
**அளவெட்டி வடக்கு.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

(இ)

# கோத்தபாய ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுப்பதற்கு இடைக்கால தடை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்கும் வகையில் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு எதிர்வரும் 23ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் நீதிபதி ஷிரான் குணரத்ன ஆகியோரால் இந்த உத்தரவு நேற்று செவ்வாய்க்கிழமை பிறப்பிக்கப்பட்டது. குறித்த மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போது, சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தடை உத்தரவை நீடிப்பதற்கான கோரிக்கையை விடுத்திருந்தார். அதற்கமைய, இந்த வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# கல்வீச்சுத் தாக்குதல் குடும்பப் பெண் படுகாயம்

(கரணவாய்)

அல்வாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கல்வீச்சுத்தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த குடும்பப் பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த துரைசிங்கம் ஜெயந்தி மலா (வயது 56) என்ற குடும்பப் பெண் மீது கல்வீசித் தாக்கப்பட்டதில் முகப்பகுதியில் படுகாயங்களிற்கு உள்ளான அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-8C)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

நல்லூரில் உள்ள வீடு ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய சமையல் நன்றாக தெரிந்த பெண் வேலையாளர் ஒருவர் உடன் தேவை.

**தொடர்புக்கு:0775269182**

**விற்பனைக்கு**


கிளிநொச்சி திருநகர், மஞ்சுளா பேக்கரி அருகில் தெற்கு வீதியில் 4 பரப்பு காணியும் 4 அறையில் புதிய வீடு விற்பனைக்கு.

**தொடர்புகள்:-கணேஸ்**
**0778803928**

(3036)


# இதய அஞ்சலி

## திருமதி இராசம்மா நாகலிங்கம்



ஊருக்கே அன்னையாய் இன்று உறங்கி விட்ட உத்தமியே
உன் பெருமை உலகறியச் செய்யும் உன் மக்கள்
பெயர் சொல்லிப் பெருமையாய் வாழ்ந்திட்ட நிம்மதியில்
பேசாது பிரிந்து சென்றனையோ நம்மை அழவிட்டு அம்மா!

இன் முகமே என்றும் இல்லை ஏனாத வாய் மொழியே
அன்பாலே அனைவரையும் தன்பால் ஈர்த்திட்ட தாயே
ஆலமரமாய் நிழல் தந்தாய் ஆயிரம் பறவைகள் பயன் கண்டோம்
உன் பிரிவை ஊர் எங்ஙனம் தாங்குமோ தவிக்கின்றோம்

வாழ் நாளில் வீண் பொழுதாய் வாழ்ந்ததில்லை நீர்
இந்நாளில் பலர் மனதில் வாழ்கின்றீர் அம்மா
பிறப்பென்றால் இறப்புண்டு எனும் பேருண்மை அறிந்து
இறையடியில் நிம்மதியாய் சாந்தியடைய வேண்டுகின்றோம்.

செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாராகிய திருமதி நாகலிங்கம் இராசம்மா அவர்கள் 27.02.2018 அன்று இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**J/215 அளவெட்டி வடக்கு,**
**கிராம செயலகமும் பொது மக்களும்**

(கி-1734)



# அம்பாறை தாக்குதல் அமைச்சரவையில் ஹக்கீம் காரசாரம்

(கொழும்பு)

அம்பாறையில் இனவாத வன்முறையில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து. பிணை வழங்குவதில் இறுக்கமான சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும். தாக்குதலுக்குள்ளான பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலையத்தை அரச செலவில் புனரமைப்பதுடன். வாகனங்களுக்கும் உடைமைகளுக்கும் உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சரு மான ரவூப் ஹக்கீம் நேற்று அமைச்சரவையில் காரசாரமாகத் தெரிவித்தார்.

அம்பாறை பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலையம் தாக்குதல் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சரு மான ரவூப் ஹக்கீம் நேற்றுநடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

நேற்று அதிகாலை நேரத்தில் பள்ளிவாசல் தாக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையம் தீவைக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு கலவரங்கள் நடை பெற்று முடியும் வரைக்கும் பொலிஸார் தலையிடாமல் இருந்தமைக்கு கண்டனம் தெரிவிக்கிறோம். உளவுப் பிரிவுக்கு தெரியாமல் இந்த விடயங்கள் நடந்திருக்காது.

ஆனால், உளவுப்பிரிவும் இந்த விடயத்தில் அவதானம் செலுத்த தவறியுள்ளது என்று ரவூப் ஹக்கீம் அமைச்சரவையில் குற்றஞ்சாட்டினார்.(இ-7)

# பிரபாகரனின் வீரத்தை பார்த்து வளர்ந்தவர்கள்

## நடிகர் சத்தியராஜ் பெருமிதம்



(சென்னை)

முதுகில் குத்தும் பழக்கம் தமிழினத்தில் கிடையாது என தென்னிந்திய பிரபல நடிகர் சத்தியராஜ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற பிரபல சினிமா விருது வழங்கும்நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விழாவில் பாகுபலி படத்தில் கட்டப்பா வேடத்தில் நடித்ததற்காக. சிறந்த குணச்சித்திர நடிகருக்கான விருது சத்தியராஜ்க்கு வழங்கப்பட்டது.

இதன்போது "நிஜ வாழ்வில் யாருக்கு கட்டப்பாவாக இருக்க ஆசைப்படுகின்றீர்கள்" என நிகழ்ச்சி தொகுப்பாளர்களால் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்து பேசிய நடிகர் சத்தியராஜ். "எங்கள் இனத்தில் அந்த பழக்கம் கிடையாது. நேருக்கு நேர் நின்று போராடும் குணம் படைத்தவர்கள் நாங்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வீரத்தை பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள். ஆகையினால். யாரையும் முதுகில் குத்தும் பழக்கம் கிடையாது" என அவர் பதிலளித்தார். (இ-7)

# கோத்தாவை கைதுசெய்ய அரசு திட்டம்

## பரபரப்படையும் தென்னிலங்கை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை இரு தினங்களுக்குள் கைது செய்ய திட் டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக தாய்நாட்டுக்கான படையினர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் ஓய்வுபெற்ற இராணுவ மேஜருமான சட்டத்தரணி அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொது ஜன பெரமுன கட்சி நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரம துங்கவின் கொலை வழக்கில், கோத்தபாயவை கைது செய்ய திட்டமிடப்பட்டு வருகின்றது. உண்மையில் லசந்த கொலையின் பிரதான குற்றவாளி அமைச்சர் சரத்பொன்சேகாவே.

கடந்த காலங்களில் சரத் பொன்சேகாவின் குழுவினரே லசந்தவைக் கொலை செய்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவந்தார். எனினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவர் அதனை மறந்து விட்டு பொன்சேகாவிற்கு பதவி கொடுத்து தன் பக்கம் வைத்துள்ளார்.

லசந்தவின் மூத்த சகோதரனான லால் விக்கிரமதுங்கவும். சரத் பொன்சேகாவின் குழுவே லசந்தவை கொலை செய்தது என ஜெனிவாவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

ஆனாலும் சரத் பொன்சேகாவின் மீது விசாரணைகள் நடத்தப்படவில்லை. உண்மையான குற்றவாளிகளை காப்பாற்றிவிட்டு கோத்தபாயவை சிக்க வைக்கும் முயற்சிகள் தற்போது பரபரப்பாக நடைபெற்று வருகின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதி வாய்ந்தவரும். 30 வருட யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வர பங்காற்றியவரும். இராணுவத்தின் மீதும். நாட்டின் மீதும் அதிக பற்றுடைய வருமான கோத்தபாய மீது அவதூறுகளை பரப்பிவருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அஜித் பிரசன்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அர்ஜுன் மகேந்திரன் எங்கே?

## சிங்கப்பூரிலிருந்து திரும்பிவந்தது நீதிமன்ற உத்தரவு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் அவரது சிங்கப்பூர் வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

டீ.எச்.எல். அதிவேக பார்சல் சேவை நிர்வாகம் இந்த விடயம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை வந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு அர்ஜுன் மகேந்திரனுக்கு கொழும்பு கோட்டை



நீதவான் நீதிபதி லங்கா ஜயரத்ன உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

அது தொடர்பான நீதிமன்ற உத்தரவை குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார் டீ.எச்.எல் அதிவிரைவு பார்சல் சேவையினூடாக அர்ஜுன் மகேந்திரனுக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

எனினும் அவர் வழமையான முகவரியில் தற்போது இல்லை என்றும் அவரது வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டுள்ளதாகவும் டீ.எச்.எல். அதிவிரைவு பார்சல் சேவை நிர்வாகம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதுடன். அர்ஜுன் மகேந்திரனுக்கு அனுப் பப்பட்ட நீதிமன்ற உத்தரவு அடங்கிய கடிதத்தையும் திருப்பிக் கையளித்துள்ளது. (இ-7)

# அரசிற்கு சவால் விடும் தலைவர்களை கைது செய்ய முயற்சி- பீரிஸ் தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு சவால் விடுக்கக்கூடிய தலைவர்களை கைது செய்ய முயற்சிக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களில் அரசாங்கத்திற்கு சவால் விடுக்கக்கூடிய தலைவர்களை சிறையில் அடைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக பொய்ப் பிரசாரங்கள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். மலர்மொட்டு சின்னத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளதனால் வேறு சின்னம் அவசியமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முடிந்தால் ஆட்சியை கவிழ்த்துக்காட்டுங்கள்

## மகிந்தவிற்கு காரியவசம் சவால்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் காணப்பட்ட நிலை தற்போது இல்லை. ஆட்சியை கவிழ்த்து விடுவதாக கூறுகின்றவர்கள் முடிந்தால் அதனை செய்து காட்ட வேண்டும் என கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நல்லாட்சி அரசாங்கத்தினை வீட்டுக்கு அனுப்பி விடுவதாக சிலர் கொக்கரித்து வருகின்றனர். அவ்வாறானவர்களும், பொது ஜன பெரமுனவினரும் முடிந்தால் பெரும்பான்மையை நிரூபித்து அரசாங்கத்தை வீழ்த்திக் காட்டலாம்.

தற்போதைய சூழலில் ஊடகங்கள் சுதந்திரமாக இயங்கும் நிலையினை நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கியுள்ளது. மகிந்த காலத்தில் இப்படியான நிலை காணப்படவில்லை.

ஊடகங்கள் மீது தாக்குதல்களும்.வெள்ளைவான் கடத்தல்களும் இடம்பெற்று வந்தன. அவ்வாறானவர்களே தற்போது ஆட்சிக்கவிழ்ப்பு குறித்து பேசுகின்றனர்.

அதேபோல அமைச்சரவை மாற்றமானது நகைச் சுவையான விடயம் என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால் அவருடைய காலத்திலேயே அவ்வாறான முறைகேடுகள் நடைபெற்று வந்தன என்பதனை மறக்கக் கூடாது.

அமைச்சர்களுக்கு ஏற்ற வகையில் அமைச்சுப் பொறுப்புகளை வழங்க முடியாது. பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு அமைவாகவே அமைச்சு பொறுப்புகள் வழங்கப்படும் எனவும் அகிலவிராஜ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சமாதான மக்கள் திட்டம்

## அமெரிக்காவும் இலங்கையும் உடன்படிக்கை கைச்சாத்து



(கொழும்பு)

இலங்கையில் சமாதான மக்கள் வேலைத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அமெரிக்காவோடு இருதரப்பு ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வில், இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன வும் அமெரிக்காவின் சார்பில் அந்நாட்டின் சமாதான படையின் பதில் பணிப்பாளர் ஷீலா க்ரோவிரியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்பும் பங்கேற்றனர்.(இ-7)

# பிரியங்கவை அழைத்துவரமுடிந்தால் அர்ஜுன் மகேந்திரனை ஏன் இங்கு அழைத்துவர முடியாது?

## கூட்டு எதிரணி கேள்வி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை எதிர்வரும் 24 மணித்தியாலத்தினுள் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு மகிந்த அணியினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கோரிக்கையை மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளார்.

நாட்டின் ஜனாதிபதி அல்லது குறைந்த பட்சம் வெளிவிவகார அமைச்சர். சிங்கப்பூர் அரசாங்கத்திடம் அர்ஜுன் மகேந்திரனை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

இதன் ஊடாக 24 மணி நேரத்துக்குள் அவரை நாட்டுக்கு அழைத்துவர முடியும் என்று டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகரத்தில் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிகேடியரை 24 மணி நேரத்துக்குள் நாட்டுக்கு அழைத்து வர இலங்கையின் வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்திருத்திருந்தது.

இதன்படி மத்திய வங்கியின் முறிமோசடியில் பிரதான சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரனை ஏன் அழைத்துவர முடியாது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



இந்தவிடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் டளஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# ஹோலி கொஞ்சம் ஓவர் - ஸ்ரீவ் வோ

"களத்தில் ஆக்ரோஷமாக செயற்படுவதில் ஹோலி சற்று 'ஓவராக' நடந்து கொள்கிறார் என ஆஸியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவ் வோ தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா சென்ற இந்தியா, டெஸ்ட் தொடரை இழந்தாலும் (1-2), அடுத்து நடந்த ஒருநாள் (5-1), 'ரி20' (2-1) தொடரை கைப்பற்றி அசத்தியது. ஒருநாள் தொடரில் துடுப்பாட்டத்தில் அசத்திய இந்திய அணியின் தலைவர் ஹோலி 558 ஓட்டங்கள் குவித்தார்.

இது குறித்து ஸ்ரீவ் வோ கூறியதாவது,

தென்னாபிரிக்க தொடரில் ஹோலியின் செயற்பாடுகளை பார்த்தேன். அங்கு சற்று ஓவராகத்தான் ஆக்ரோஷமாக நடந்து கொண்டார் என்று நினைக்கிறேன். அணித் தலைவர் பணியில் தற்போதும் ஹோலி கற்றுக் கொண்டுதான் வருகிறார்.

தனது அதிகபடியான எதிர்பார்ப்புகள், உணர்ச்சிகளை குறைத்துக் கொள்ள, இன்னும் சிறிது காலம் தேவைப்படும். அணியில் உள்ள மற்றைய வீரர்களும் தன்னைப் போல அதே வேகத்துடன் விளையாட மாட்டர் என்ற உண்மையை ஹோலி தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய அணியின் ரகானே, புஜாரா உள்ளிட்டோர் நிதானமாக செயற்படுவர். இதனால் ஒருசிலர் வித்தியாசமாக இருப்பர் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். களத்தில் எப்போது தேவையோ அதற்கேற்ப வேகமாகவும் தேவையற்ற நேரங்களில் பொறுமையாகவும் இருந்தால் நல்லது.

போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்துடன், எப்போதும் விளையாட வேண்டும் என விரும்புகிறார். இதனால் விரைவில் வெற்றியை அடையலாம் என்பது இவர் எண்ணம். இதனால் கடந்த சில ஆண்டுகளாக மூன்று வித கிரிக்கெட்டிலும் இந்திய அணி சிறப்பான வெற்றிகளைப் பெறுகிறது.

தவிர அனைத்து வித போட்டிகளிலும் இந்தியா தான் 'நம்பர்-1' ஆக இருக்க வேண்டும் என ஹோலி விரும்புகிறார். நவீன கால கிரிக்கெட்டில் இது மிகவும் கடினம்.

வரும் அவுஸ்திரேலிய தொடரில் இந்தியா வெற்றி பெற ஹோலி முக்கிய உதவியாக இருப்பார். சொந்த மண்ணில் இந்தியாவைப் போல, நாங்களும் அசைக்க முடியாத அணியாகத்தான் உள்ளோம். இவ்வாறு ஸ்ரீவ் வோ கூறினார்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12 - 12 - 1931

மறைவு 27 - 02 - 2018

### திருமதி இராசம்மா நாகலிங்கம்

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்களின் பாசமிகு தாயார் இராசம்மா நாகலிங்கம் அவர்கள் நேற்று (27.02.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

St John Ambulance Sri Lanka

மாவட்ட ஆணையாளர்
உதவி மாவட்ட ஆணையாளர், உத்தியோகத்தர்கள்
சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்டம்

## இதய அஞ்சலி



தோற்றம் 12 - 12 - 1931

மறைவு 27 - 02 - 2018

செட்டிச்சோலை, அளவெட்டி
வடக்கைச் சேர்ந்த அமரர்
பண்டிதர் நாகலிங்கத்தின் மனைவி

### திருமதி இராசம்மா நாகலிங்கம்

அவர்களின் பிரிவு குறித்து அளவெட்டி மகாஜன சபையினர் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அளவெட்டி மகாஜன சபையினர்

(3047)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## ST. JOHN'S ACADEMY & COLLEGE OF TECHNOLOGY
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## ADMISSION - 2019 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

### தரம் 01, தரம் 04, தரம் 06 தரம் 10 இற்கான அனுமதி 2019

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 02.03.2018 முதல் 20.03.2018 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 26.03.2018 திங்கட்கிழமை அத்திகதிக்கு பின்னர் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
2. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (Photo copy) இணைக்கப்பட வேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம் .
4. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000.00
5. வயதெல்லைகள்:
   அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2013க்கும் 31.01.2014க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2010 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2008 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2004 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
6. தரம் 12 (A/L 2021 Batch) விண்ணப்பதாரி 01.02.2002 இல் அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7. தரம் 04 தரம் 06 தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 06.10.2018 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தினால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கும் (A/L 2021 Batch) ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ் மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழில்நுட்பவியல்) Londan A/L 2019/2020ற்கும் விண்ணப்பப்படிவங்கள் சென் ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 05.01.2019 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 07.01.2019 திங்கட்கிழமை ஆரம்பமாகும். ஆண்டு 01 இல் மும்மொழிக்கற்கைநெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L தமிழ் /ஆங்கில மொழி மூலம் 2020 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்கள் (C-1733)

## நீங்கா நினைவுகளுடன்

## 6ம் மாதம்

பிறப்பு:-04 - 11 - 1953

இறப்பு:-28 - 08 - 2017



### திருமதி பிரான்சீஸ் நாகரத்தினம்

(செபமாலை அம்மா)

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் இல்லாத உலகம் என்றும்
இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள்
மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவை தாங்குமா
எங்கள் இதயம்

குடும்பத்தினர்
வராகி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (2918)

# காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி

## அமைச்சர் சமரசிங்க தகவல்



(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் இதற்காக இந்தியாவின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் துறைமுகம் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் இதற்கென 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை இன்னும் இரு வாரங்களில் அமைச்சரவையில் மட்டுமன்றி அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் அதன் தலைவர்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி தயாராகியுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அம்புலன்ஸ் சாரதிகள் மூவர் உண்ணாவிரதம்

அநுராதபுரம் பொது வைத்தியசாலையில் பணி புரியும், அம்புலன்ஸ் வண்டிகளின் சாரதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சாரதிகள் மூவர் நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். வைத்தியசாலை முன்பாக குறித்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கண்ணீர்க் காணிக்கை



**திரு. முருகேசு கோபாலபிள்ளை**

உருத்திரபுரம் வைத்தியசாலையில் உயர்வான கடமையாற்றி அனுபவ ரீதியாகவும் ஆற்றல்மிக்க வகையிலும் சேவை செய்த வைத்திய கலாநிதி திரு.முருகேசு கோபாலபிள்ளை அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தை தெரிவிக்கின்றோம்.

சிவநகர்
உருத்திரபுரம்.

சு. இரகுபதி குடும்பத்தினர்
ஓய்வுநிலை ஆயுர்வேத வைத்தியர்

(C4196)

# அம்பாறை அசம்பாவிதம் குறித்து பாரபட்சமின்றி நடவடிக்கை

## பொலிஸாரைக் கோருகிறார் அமைச்சர் றிசாத்



(கொழும்பு)

அம்பாறையில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் பொலிஸாரை வலியுறுத்தியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கடையொன்றுக்கு நேற்று அதிகாலை வருகை தந்த ஒரு சில பெரும்பான்மையினத்தவர்களால் கடை உரிமையாளர் மீதும் கடை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அருகில் உள்ள பள்ளி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த அசம்பாவிதம் தொடர்பில் அறிந்து கொண்ட அமைச்சர் றிசாத் பதியுதீன் உடனடியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்தச் சம்பவங்களை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பும் வழங்குமாறும் சம்பவத்தின் சூத்திரதாரிகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினார்.

அமைச்சரின் தொலைபேசி அழைப்பை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன், நிலைமை பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலை மற்றும் அங்கு ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்கள் குறித்து, கிழக்கு மாகாணத்திற்கான பொலிஸ்மா அதிபரையும் தொடர்பு கொண்டு அமைச்சர் றிசாத் நிலைமைகளை விளக்கியுள்ளார்.

அத்துடன் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள அம்பாறை மாவட்டத்தில், இனங்களுக்கிடையில முறுகல் நிலையைத் தோற்றுவிப்பதற்காக ஒருசில இனவாத சக்திகள் மேற்கொள்ளும் இவ்வாறான முயற்சிகளின் போது நாம் சமயோசிதமாக சிந்தித்துச் செயற்பட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# நீங்காத நினைவுகளுடன்...

**12ஆம் ஆண்டில்**



**சிவகுரு மாணிக்கவாசகர்**
பிறப்பு: 16.01.1922
மறைவு: 28.02.2006
திதி: மாசி அமாவாசை

**9ஆம் ஆண்டில்**



**சிவபாலச்சந்திரன் பிரசாத்**
(பொறியியல்பீட மாணவன்,
பேராதனை பல்கலைக்கழகம்)
பிறப்பு: 05.03.1986
மறைவு: 28.02.2009
திதி: மாசி சதுர்த்தி

அறிவுக் கடலாய் நீங்கள் வாழ்ந்து இன்பக் கடலில் எமை வாழ வைத்தீர்கள். உங்கள் அறிவும் ஆற்றலும் செயல்திறனும் எங்களை நல்வழிப்படுத்துகின்றது. ஆண்டவன் தனது விளையாட்டில் எங்களை துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டான். உயிர் உள்ளவரைக்கும் நினைவுகள் கண்ணீரோடு கலந்து இறைவன் திருவடியை அடையும். உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம். இறைவன் திருவடிகளில் இருந்து எங்களை வழிநடத்துங்கள்.

**2ஆம் ஆண்டில்**



**மாணிக்கவாசகர் சிவபாலச்சந்திரன்**
(கிளை முகாமையாளர், கரைச்சி
வடக்கு ப.நோ.கூ.சங்கம்.)
பிறப்பு: 09.03.1954 மறைவு: 02.08.2016
திதி: ஆடி அமாவாசை

தகவல்:
குடும்பத்தினர்.
57/3. முரசுமோட்டை,
பரந்தன்.

# கொழும்பு மேல் நீதிமன்றின் தலைமை நீதிபதியாக ஹெய்யந்துடுவ நியமனம்

(கொழும்பு)

கொழும்பு மேல்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஏ.ஏ.ஆர். ஹெய்யந்துடுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் மேல் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக கடமையாற்றிய மணிலால் வைத்தியதிலக்க தற்போது சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

அதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நீதிபதி ஹெய்யந்துடுவவை பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் நியமித்துள்ளார்.

நீதிபதி ஹெய்யந் துடுவ சிறிது காலத் துக்கு முன்னர் கொழு ம்பு பிரதான நீதவான் நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்**
வியாபார விருத்தியுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்**
சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்**
நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**
இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், தன வரவு திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்களின் மனம்மாறுவர், எடுத்த காரியத்தில் முன்னேற்றமுண்டு.

**இராசி பலன்**
கிரகநிலை
சூரி.சுக். புத | ராகு. சந் | கேது | சனி | குரு.செவ்
சந்திராஷ்டமம்
உத்தராடம்
இரவு 12.50 மணிக்கு
சிங்-சந்

**28.02.2018**
மாசி 16,புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
திரயோதசி முற்பகல் 10.53 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 1.24 மணிவரை
சுபநேரம் 4.58-6.28 மணிவரை
இராகுகாலம் 12.28-1.58 மணிவரை
வளவன்

**கடகம்**
சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் நன்மை காண வேண்டிய நாள்.

**மகரம்**
உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்**
தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படைய நேரிடலாம், சுப செய்திகள் கூடும் நாள்.

**தனுசு**
நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்**
பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறலாம்.

**துலாம்**
ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், முயற்சியில் முன்னேற்றமுண்டு.

**கன்னி**
குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

# மீண்டெழும் சித்தமருத்துவம் கட்டியங்கூறிய கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகும், வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் இந்திய ஆயுஸ் அமைச்சும் இணைந்து நடத்திய முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடும் கண்காட்சியும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவ அலகில் ஆரம்பமாகி ஐந்து நாட்கள் இடம்பெற்றன.

இந்தக் கண்காட்சி மற்றும் ஆய்வு மாநாட்டில், சித்த மருத்துவ மாணவர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் காட்டிய ஆர்வம் சித்த மருத்துவத்துறையை மீண்டும்மலர்ச்சியடைய செய்துள்ளது.

இது இலங்கை சித்த மருத்துவத்துறையின் வெற்றிக்கு பாரியதிருப்புமுனையாக அமைந்துள்ளதாக பலரும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## ஆரோக்கியத்துக்கான வழிகளை பெற்றோம்- பொதுமக்கள்

ஆரோக்கியத்துக்கான வழிகளை எங்கு தேடுவது, எங்கு பெற்றுக்கொள்வது என்று தெரியாமல் இருந்தோம்.

நாளுக்கு நாள் நோய்கள் பெருகுகின்றதே தவிர எமக்கான நிவாரணிகள் இல்லை. சித்த மருத்துவத்தை நாம் முழுமையாக நம்பினாலும் அதைப்பெறுவதற்கான விளக்கங்கள் அறிவுகள் எம்மிடம் இல்லை. இவ்வாறான கண்காட்சிகள் எமக்கு பாரிய உதவியாக உள்ளது என கண்காட்சியைப் பார்வையிட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

மிகக் கூடுதலான பயனை பெற்றுக்கொண்டோம். ஆரோக்கியத்துக்கான வழி கிடைத்துள்ளது. எமது சந்ததியினருக்கும் இது கொண்டு செல்லப்பட வேண்டும். இதை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

இலகுவாக பெறும் நோய் நிவாரணிகளை வீட்டில் இருந்தே பெற்றுக்கொள்வ தற்கான விளக்கங்களைப்பெற்றுக் கொண்டோம் . மிகவும் ஆர்வமாக உள்ளது.

சித்த மருத்துவ சர்வதேச மாநாடும் கண்காட்சியும் பல தகவல்களை மக்களுக்கு



கொடுத்துள்ளது. உத்வேகம் கொடுப்பதாக அமைந்துள்ளது. இது மிக பாராட்டுதலுக்குரியது. சித்த மருத்துவ உற்பத்திகளை மக்கள் மத்தியில் அதிகரிக்க வேண்டும்.

## சித்தமருத்துவத்துறை மாணவிகள் மகிழ்ச்சி

இந்தக் கண்காட்சியானது சித்த மருத்துவம் தொடர்பாக வெளியில் பொதுமக்களுக்கு தெரிவதற்கு வாய்ப்பாக உள்ளது. சித்த மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் குறைவாக உள்ளதால் இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து ஆய்வு மாநாட்டிற்காக பல மருத்துவர்கள், விரிவுரையாளர்கள் வந்துள்ளார்கள். அவர்களிடம் இருந்து பல நல்ல விடயங்களை பெறக்கூடியதாக இருந்தது.

மேலும் கண்காட்சியில் பொதுமக்களின் ஆர்வத்தை தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. மக்கள் மத்தியில் சித்தமருத்துவம் தொடர்பான நல்ல எண்ணப்பாடு சென்றுள்ள விதம் எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

இதன் நன்மைகளை நாம் பொதுமக்களிடம் கொண்டு செல்ல இருந்தோம். ஆனால் இந்த நிகழ்வின் மூலம் பொதுமக்கள் எம்மைத் தேடி தேடி வருகிறார்கள். எனவே எமது பாரம்பரிய மருத்துவத்தை எமக்கென தனித்துவமான விடயங்களை பொதுமக்களுக்கு நாம் தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பம் மாணவர்களாகிய எமக்கு புதிய உத்வேகத்தை தந்துள்ளது. ஆய்வுகள் மூலம் எமது சித்த மருத்துவத்தை விருத்தி செய்வதற்கு கூடிய ஆர்வத்தை எமக்கு தந்துள்ளது என சித்த மருத்துவத்துறை மாணவிகளான பே. யனுயா, ர.கன்னிகா ஆகியோர் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

## நம்பிக்கையை அதிகரித்துள்ளது

இந்த முறை இடம்பெற்றுள்ள சித்த மருத்துவக் கண்காட்சி மிகவும் புதுமையாக வுள்ளது. நாம் முன்னைய காலத்தில் நோய்களுக்கும் ஆரோக்கியத்துக்கும் பவுடராக (மா) கொடுத்துவரும் மருந்துகளை பொதுமக்கள் விரும்பிப் பெறக்கூடிய வகையில் மாத்திரைகளாக தயாரித்துள்ளார்கள்.

சித்த மருத்துவத்துறை தொடர்பாக ஒவ்வொரு விடயங்களையும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. நாங்கள் கைநாடி பார்த்து மருந்து

கொடுத்து வந்தோம். அப்போது எம்மில் பொதுமக்களுக்கு நம்பிக்கை இருந்தது. விரைவில் குணமடைய வாய்ப்புக்களும் இருந்தது.

சித்த மருத்துவம் மீண்டும் வளர வேண்டும். இவ்வாறான கண்காட்சிகள் எதிர்காலத்தில் சித்த மருத்துவத்துறையை முன்னேற்றுவதற்கு வழிவகுக்கும் என சித்த மருத்துவர் கிருஸ்ணபகவான் நம்பிக்கை வெளியிட்டார்.

## மாணவர்கள் மத்தியில் ஆர்வத்தை தூண்டியது

மாணவர்களுக்கு நாம் பாடப்புத்தகத்தில் இருப்பதை நேரடியாக காண்பிக்கக் கூடியதாக இருந்தது. எமது வீட்டில் உள்ள மூலிகைகள் மூலம் எமது நோய்களுக்கு மருந்துகள் தயாரிப்பதை இலகுவாக





அறியமுடிந்தது.

மாணவர்கள் இந்த கண்காட்சியை ஆர்வத்துடன் பார்ப்பதை அறிந்து கொண்டோம். இலகுவில் விளங்கிக்கொள்கிறார்கள்.

அத்துடன் மூலிகைகளை சிறு கைத்தொழில் போல வீடுகளில் உருவாக்கலாம் என்பதை அறிய முடிந்தது. என்னென்ன மூலிகைகள், மருந்துகள் பயன்படுத்த வேண்டும் என்பதை மிக இலகுவாக அறிந்து கொண்டோம் மிகவும் பயனாக இருந்தது. தேவையற்ற உணவுகளும் மருந்துகளும் எடுத்துக் கொள்ளாமல், இலகுவாக நோயைத் தடுக்கும் பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இது போன்று இக் கண்காட்சிகள் தொடர்ச்சியாக இடம் பெறுமானால் சித்த மருத்துவத்துறை மூலம் பல நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தனர்.

## இலங்கை சித்த மருத்துவ வரலாற்றில் வெற்றிக்கான திரும்புமுனை

சித்த மருத்துவம் என்பது தமிழர்களுடைய பாரிய சொத்தாகும். அதைத் தனித்துவமாகக் கொண்டு செல்வதற்கு வழிசமைக்குமாறுநான்கோரிய விடயம் தற்போது நடைபெறுவது எனக்கு மிக மகிழ்ச்சியாக உள்ளது.

சேர்.பொன் இராமநாதனுடைய கனவு நனவாகியுள்ளது. தமிழ்ப் பாரம்பரியம் பேணப்பட வேண்டும் என்ற நோக்கில்அவர் தனது பணியை ஆற்றினார். அந்த வகையில் கல்வித்துறையானது எமது பிரதேசத்தின் சுதேசம், வைத்தியம், மொழி, சமயம் போன்றவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளது.

இந்த வருடம் சித்தமருத்துவத் துறை தனி நிறுவனமாக வருவதற்குரிய அங்கீகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

பொதுமக்கள் திரள்திரளாக வந்து சித்த மருத்துவத்துறை பற்றி ஆவலாக கேட்பதை பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சித்த மருத்துவத்தை பயிலும் மாணவர்களுக்கு மேலும் ஊக்கத்தை தந்துள்ளது.

எம்மிடையே கிடைக்கும் தாவரங்களை பற்றி தெரியாத எமக்கு இலகுவாக தாவரங்களை நாம் அறிந்து கொள்ளக்கூடியதாகவும் பயனை அடையக்கூடியதாகவும் இது அமைந்துள்ளது. இந்தக் கண்காட்சி சித்த மருத்துவ வரலாற்றில் பெரிய வெற்றிக்கான திருப்புமுனையாகும்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் இத் துறையை இலங்கையில் வளர்ப்பதற்கு உதவுவதாக குறிப்பிட்டுள்ளார்கள். சேர் பொன். இராமநாதனின் சிந்தனையை சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லகளம் அமைத்தது மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியில் இயங்கவும் ஆராய்ச்சி செய்யவும் உரிய துறையாக இது வளர்ச்சி பெற இக் கண்காட்சியும் மாநாடும் அமைந்துள்ளது.

யாழ்.பல்கலையின் கல்வி முயற்சியில் இது பெரிய திறவுகோலாக அமையும் என்பதுடன் சர்வதேச தளத்துக்கு இட்டுச்சென்று மேலோங்க வழிவகுக்கும். சித்த மருத்துவமானது எமது வாழ்க்கை முறை மற்றும் கலாசாரத்தில் தங்கியுள்ளது.எனவே சித்த மருத்துவம் பின்னோக்கிச்செல்லாது வீறு நடைபோடும் என்பதில் ஐயம் இல்லை என யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் சுட்டிக்காட்டினார்.

## பொதுமக்கள் கொண்டுள்ள ஆர்வம் சித்த மருத்துவத்துக்குரிய பெரு வெற்றி

சர்வதேச சித்த மருத்துவ மாநாட்டில் அமைந்துள்ள மூலிகை கண்காட்சி எம்மை மிகவும் கவர்ந்துள்ளது. மிகச் சிறப்பாக அமைத்துள்ளார்கள். உடற்கூறு கண்காட்சி மிக சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

பல மாணவர்கள், பொதுமக்கள் வந்து இந்தக் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்க்கும் போது இது மிகப் பெரும் வெற்றியாக அமைந்துள்ளது.

இலங்கையில் சித்த மருத்துவத்துக் குரிய ஊக்கமும் ஆக்கமும் உண்டாகும். இது போன்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும். அதற்கான உதவிகளை மலேசியாவில் இருந்து வழங்குவதற்கு தயாராக உள்ளோம் என இந்திய ஆய் வியல் துறை, மலாய பல்கலைக்கழக பேராசிரியர் மு.இராசேந்திரன் தெரிவித்தார்.

## பாடப்புத்தகத்தில் இருப்பதை நேரில் பார்த்து அறிந்தோம்


சித்த மருத்துவ நூல்கள் விற்பனை செய்தார்கள், அதில் பல விடயங்கள் இருந்தது. எமக்கு ஏற்படும் சிறு நோய்களைக் குணப்படுத்த வீட்டில் இருந்து தயாரிக்கக் கூடிய மருந்து வகைகள்என்ன என்பது அறிந்து கொள்ள முடிந்தது.

புது விடயங்களை அறிந்து கொண்டோம். மனிதனின் வளர்ச்சி மனித பாகங்கள் தொடர்பாக அறிந்து கொண்டோம். எமது முன்னோர்கள் நீண்ட காலம் வாழ்ந்தமைக்கான காரணிகளை அறிந்து கொண்டோம். இந்தக் கண்காட்சி தொடர்ந்து நடைபெற வேண்டும். பாடப்புத்தகத்தில் பார்த்தவற்றை தற்போது நேரில் பார்க்கும் போது கூடுதலான விளக்கங்களை பெறக்கூடியதாக இருந்தது. இது விவசாயத்துறை, விஞ்ஞானத்துறை தொடர்பான மாணவர்களுக்கு அதிக உதவியாக இருக்கும் என பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.

## சித்த மருத்துவம் எனும் பெரிய பொக்கிசத்தை பாதுகாக்க அரசு முன்வர வேண்டும்

எமது நாட்டில் சித்தமருத்துவம் அபிவிருத்தியடையவில்லை. எமது சமுதாயம் பாரத்துக்கொள்ளும் விதம் மற்றும் எமது மருத்துவர்கள் கொடுக்கும் முக்கியத்து வத்தில் தான் இந்த குறைபாடு ஏற்பட்டுள்ளது.

இத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசாங்கம் முயற்சி செய்யவில்லை. இந்தியாவில் சித்த மருத்துவத்தில் உள்ள ஒவ்வொரு கலையையும் மிக



ஆழமாக கற்கிறார்கள். ஆனால் இங்கு அந்த வசதிகள் இல்லை. அரசு அதை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும்.

சித்த மருத்துவம் எனும் பெரிய பொக்கிசத்தை எமது கைகளில் வைத்துக் கொண்டு அதை பாதுகாக்க தெரியாமல், முடியாமல் உள்ளோம். எமக்கு ஆதரவு கிடைப்பது குறைவு. இந்த கண்காட்சி மாணவர்கள் மத்தியில் தான் முதலில் கொண்டு செல்லப்பட வேண்டும். அது தற்போது இடம்பெறுவது பெரிய நன்மைக்குரிய விடயம்.

பல விடயங்களை தொலைத்துவிட்டோம். இனி மிச்சம் இருக்கும் பொக்கிசங்களையாவது எதிர்கால சந்ததிக்கு எடுத்துச்செல்ல முன்வர வேண்டும். அந்த வகையில் சித்த மருத்துவத்தின் அடிப்படையில் இருந்து ஒவ்வொன்றாக கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளமை பெரும் சிறப்பம்சமாகும். சித்தமருத்துவம் விருத்தியடைந்தால் எமது சமுதாயம் விருத்தியடையும் எனசித்த மருத்துவர் சரண்யா (திருகோணமலை) தெரிவித்தார்.

## கண்காட்சி பெருவெற்றி

சித்த மருத்துவக் கண்காட்சிகள் பல நடைபெற்றாலும் இம்முறை சர்வதேச ரீதியில் நடைபெற்றுள்ளது. சித்தமருத்துவத்துறை எமது வாழ்வியலுடன் ஒன்றிணைந்துள்ளது. இது மக்களின் சுகாதார வாழ்க்கைக்கு அவசியமானதாக இருந்தாலும் இந்தத் துறை சார்ந்த விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் போதுமானதாக இல்லை.

மேலைத்தேய மருத்துவத்தின் வருகைக்கு பின்னர் சுதேச, சித்த மருத்துவப் பாவனை படிப்படியாக குறைவடைந்து சென்றுள்ளது. இது தொடர்பாக போதிய கவனம் செலுத்தவில்லை.

இது தொடர்பாக விழிப்புணர்வும் ஆய்வுகளும் ஊக்குவிக்கப்படவேண்டிய தேவையுள்ளது. உலகளாவிய ரீதியில் சித்தமருத்துவத்துறை விரிவடைந்து வரும் நிலையில் இலங்கையில் சித்தமருத்துவத்துறையை ஊக்குவிப்பதற்கு நாம் முயன்றுள்ளோம். அதன் பயனாக ஆரம்ப பயணத்தில் பெரு வெற்றி கண்டுள்ளோம்.

உடல், மனம், ஆத்மாவில் ஆரோக்கியத்தை எவ்வாறு கொண்டுவருவதென்பது தொடர்பில் கண்காட்சியை முன்வைத்துள்ளோம். மருந்தில்லா மருத்துவம் எவ்வளவு தேவை என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

குறிப்பாக மாணவர்கள், பெண்கள் மத்தியில் இக்கண்காட்சி ஆர்வத்தைத் தூண்டியுள்ளது என்பதை அறியக் கூடியதாக உள்ளது. இது ஆரம்பம் மட்டுமே. மிகவும் நல்ல ஆரோக்கியமான நிகழ்வாக அமைந்துள்ளது. எதிர்பார்த்திராத அளவு வெற்றியை அடைந்துள்ளோம் என்றார் வடமாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் திருமதி சியாமளா துரைரட்ணம்.

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு, சுதேச மருத்துவத் திணைக்களங்கள், இலங்கை இந்திய தனியார் சித்த மருத்துவ துறைகள், வடமாகாணத்தில் உள்ள மருந்து உற்பத்தி விற்பனை நிலையங்கள் இந்த கண்காட்சியில் தமது ஆக்கங்களுடன் பங்கு பற்றியிருந்தனர்.

தொகுப்பு: பொ.சோபிகா

# பதுளை அதிபர் மண்டியிட்ட விவகாரம்; ரூ.500 மில்.நட்டஈடு கோரி வழக்கு

## முதலமைச்சர் சாமர கடிதம்



(கொழும்பு)

பதுளை தமிழ்மகளிர்மகா வித்தியாலய அதிபர் ஆர்.பவானியை அச்சுறுத்தி முழந்தாளிட வைத்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மேற்படி அதிபரிடம் 500 மில்லியன் ரூபா நட்டஈடு கேட்டு, கோரிக்கைக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அதிபரால் தனது பெயருக்கு களங்கம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறியே அவர் கோரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளார். இதேவேளை, சாட்சியை அச்சுறுத்தும் நோக்கிலேயே இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையத்துக்கு இலங்கை மனித உரிமை கேந்திரம் நேற்று முன்தினம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

பதுளை தமிழ்மகளிர்மகா வித்தியாலய அதிபரை மண்டியிடச் செய்த விவகாரம் பூதாகரமான நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பல மட்டங்களிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே இந்தக் கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின்
பிரதி அதிபர்

**திரு.சிறில் அன்ரன்**

அவர்கள் கல்வி நிர்வாக சேவை தரம் IIIற்கான பரீட்சையில் சித்தியடைந்து பதவி உயர்வு பெற்றுச் செல்வதையிட்டு பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(3044)

கல்லூரிச் சமூகம்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு:
**021 221 7603,**
**021 567 1532**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: செவ் 1இல்
தகைமை/தொழில்: O/L
தொ.இ: B/7525

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 13 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில் டுபாய்
தொ.இ: B/7527

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 32 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்
தொ.இ: B/7529

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7541

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 19 உயரம்: 5'8"
தகைமை/தொழில்: CIMA
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6663

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 8
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA,ஆயுள்வேதம்
தொ.இ: G/6665

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 56
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/Lஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6666

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: G/6668

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


உ
சிவார்ப்பணம்

# கடையிற் சுவாமிகளின் அமெரிக்க ஹாவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் கடையிற் சுவாமிகளின் சமாதிச் சிவாலயத்திற்கு வருகை



"முத்தி" என்று இந்து மதம் வரையறுத்துள்ள இறைவனை அடைந்து இறை நிலை எய்தும் அந் நிலையை நோக்கியே அண்டசராசரத்தில் படைக்கப்பட்டுள்ள அனைத்து ஆத்மாக்களும் பயணிக்கின்றன. அவரவர் செய்யும் நல்வினை, தீவினைக்கு ஏற்ப முத்தி நிலைப் பயணத்தில் முன்னேற்றங்களும் தடைகளும் ஏற்படுகின்றன. ஆன்மாக்கள் கருமங்கள் புரிவதற்காகவே உலகில் உடல் எனப்படும் கருவி வழங்கப்படுகின்றது. இவ் உடல் வகைகள் உலகில் எண்பத்துநான்கு இலட்சம் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இவற்றினுள் அதி உயர்வானதாக கருதப்படுவது மானிடப்பிறவியேயாகும். நல்வினை எது? தீவினை எது? என்பவற்றைப் பகுத்தறிந்து தீவினையை ஒதுக்கி நல்வினைகளை செய்வதற்கு மனிதப் பிறவிக்கே பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவை இறைவன் வழங்கியுள்ளார். இவ் அறிவைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் செய்யும் நற்கருமங்களும் கணக்கிடப் பெறுகின்றது. தீய கருமங்களை செய்துவிட்டு பின்பு ஏதாவது நற்கருமம் செய்து விட்டால் தீய கருமத்திற்கான கெடு விளைவிலிருந்து நல் கருமத்திற்கான நல் விளைவு நம்மை காத்து விடுமென நினைப்பது நமது மடைமை மற்றும் தவறான சிந்தனை.

இறைவனின் கணக்கில் நல்வினையும் வரவு வைக்கப்படுகின்றது.தீவினையும் வரவு வைக்கப்படுகின்றது. நல்வினைக்கான பலன் ஆசீர்வாதமும், மகிழ்ச்சியும் உயர் நிலையும் என்று இறைவனால் தீர்மானிக்கப்பட்டு, நற்பலன்களை அவ் ஆன்மா அனுபவிக்கும் நிலையில் அவர் செய்யும் தீவினைக்கான பலன் சாபமும், துக்கமும், தாழ்நிலையுமே என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கான தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்.

அதனால் நம் முன்னோர்கள், மக்கள் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டால் தம் மனதை அடக்கி, இறைவழிபாட்டில் மனம் செலுத்தி தீவினைகளை அகற்றி நல்வினைகளை செய்வர் என்று சிந்தித்து, நல்வினை, தீவினை என்பவற்றினை அறிவுறுத்தும் இறைவனால் உலகத்தினருக்காக அருளப்பட்ட வேதத்தினையும், புராணங்களையும் மக்கள் படித்து உணர வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளார்கள்.

புராணங்கள், வேதங்களை படித்து அறியமுடியாத சாதாரண மக்களுக்கு வழிகாட்டவே அவற்றை உணர்ந்த ஞானிகளும், சித்தர்களும் இறைவனின் கட்டளையால் மனித சமுதாயங்களில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தோன்றி மக்கள் வாழ்க்கைப் பாதையினை நேர்ப்படுத்துகின்றனர்.

அவ்வகையில் இறைவனால் யாழ்ப்பாணத்து மக்களுக்கு வழங்கப்பட்ட அருள்ஞான வரம் ஈழத்துச் சித்தர் பரம்பரையின் ஆதிமுதற்குரு அருள் ஞான வள்ளல் கடையிற் சுவாமிகள் ஆவார் என்றால் அது மிகையாகாது.

அகத்தியர், திருமூலர் தொடங்கி கோரக்கர் வரை இருந்த பதினெண் சித்தர்கள் அடியைப் பின்பற்றி பல சித்தர்கள் தோன்றியிருக்கின்றார்கள். அவர்கள் வழிவந்தவர்களே எமது சித்தர் பரம்பரையினர். இலங்கையில் அருள் ஞான பரம்பரை ஒன்று மலர்வதற்கு வித்திட்ட மூலமுதல்வர் எமது ஆதி கடைநாதனேயாவார்.இந்தியாவில் பெங்களூர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த காலத்தில் கொலைக்குற்றவாளி ஒருவனுக்கு தீர்ப்பு வழங்க வேண்டிய சமயத்தில் சுவாமிகளுக்கு ஞானத் தேடல் ஏற்பட்டது. அத்தேடல் தமக்குரிய ஞான குருவை அடைய வழிசெய்தது. அக் குருமூர்த்தியானவர் மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் அறுபத்திநான்காவது தலைவராக (1817-1879) வீற்றிருந்து அருள்பாலித்த ஞான குரு ஸ்ரீநரசிம்ம பாரதிபாராவார்.

முத்தியானந்தர் எனும் தீட்சாநாமம் கொண்டு குருவின் கட்டளையை சிரமேல் கொண்டு 1862 ஆம் வருடம் ஈழநாட்டில் ஞான கடாட்சம் புரிய திருவுளம் கொண்டு சுவாமி முத்தியானந்தர், சுவாமி சின்மயானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் என்ற மூன்று சித்தர்கள் ஈழம் வந்தனர் என்று கர்ண பரம்பரைச் செய்தி கூறுகின்றது.

சுவாமி முத்தியானந்தர் யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதிகளில் அதிகம் நடமாட்டம் செய்து வந்தமையால் கடையிற் சுவாமிகள் என்ற திருநாமமே நிலை பெற்றுவிட்டது.

மண்டைதீவில் நன்னியார் என்பவரின் வீட்டின் ஒரு பகுதியில் இருந்து அருளாட்சி செய்தார் சுவாமிகள். அவ்வீடு பிற்காலத்தில் சிதைந்து போய் விட்டாலும் சுவாமிகள் தங்கியிருந்த பகுதி மட்டும் அவ் ஊர் அன்பர்களால் இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**யாழ்மண்ணில் சுவாமிகளின் சித்து விளையாடல்களோ எண்ணிலடங்கா.**

மிக வறிய நிலையிலிருந்த அன்பர் ஒருவரிடம் இரும்புத் துண்டு ஒன்றைப் பெற்று அதனைப் பொன்னாக்கி அவர் வறுமையைப் போக்கியருளினார்.

ஐந்து வயதாகியும் எழுந்து நடக்க முடியாதிருந்த குழந்தை ஒருவரை எழுந்து நடக்கச் செய்தார்.

திருநெல்வேலி ஊரைச் சேர்ந்த பக்தை ஒருவரின் கைவளங்கா நிலையில் இருந்த போது சுவாமிகள் அந் நோயை குணமாக்கினார்.

இணுவில் அம்பிகைபாகர் என்ற தமிழ் பேரறிஞர் ஒருவர் மாதவச் சிவஞான சுவாமிகளின் சீடர் ஒருவரால் எழுதப்பட்ட தணிகைப் புராணத்திற்கு உரை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்த போது சில பாடல்களுக்கு உரைநடை காண்பதில் கஷ்டமுண்டாயிற்று.ஒருநாள் அம்பிகைபாகர் பெரிய கடைதெரு வழியே சென்று கொண்டிருந்த போது கணீரக் குரலில் சில பாடல்கள் பாடப்பட்டு அதன் விளக்கத்தையும் சொல்லிக் கொண்டிருந்தார் எம் சுவாமிகள். அப்பாடல்கள் அம்பிகைபாகர் பொருள் காண சிரமப்பட்ட பாடல்களேயாம். அன்று முதல் அவரும் சுவாமிகளின் அன்பரானார்.

**சுவாமிகள் தமது முதன்மைச் சீடர் செல்லப்பா சுவாமிகளை ஆட்கொண்ட சம்பவம் விநோதமானது.**

நல்லூர் பகுதியில் வாழ்ந்து வந்த செல்லப்பர் எனும் நாமம் கொண்டவர் சுவாமிகளிடம் ஆரா அன்பு பூண்டவர். சுவாமிகளைக் காண பெரியகடைப் பகுதிக்கு சென்ற போது சுவாமிகள் கடைக்கார பெண்மணியிடமிருந்து ஒரு ரூபா நாணயம் ஒன்றை வாங்கி அதை வெற்றிலையில் மடித்து செல்லப்பரின் கையில் கொடுத்து, தம் கையிலிருந்த குடையை அவர் தலைமேல் அசைத்துத் தட்டி "ஓடடா" என்றார். அன்றிலிருந்து பதினைந்து நாட்கள் வரை பூவுதை நிலை மறந்த நிலை செல்லப்பருக்கு. அதன்பின் அவர் உலகம் போற்றும் உத்தம ஞானியாகி தம் சீடராக யோகர் சுவாமிகளை உருவாக்கியமை உலகம் அறிந்ததே.

தம்மை பித்தனாக கருதிய பொலிஸார் ஒருவரை தம் சீடனாக்கியமை குறிப்பிடத்தக்கது. பெரியகடைப் பகுதிகளில் பைத்தியக்காரரைப் போல் திரிந்து கொண்டிருந்த எமது குருநாதனை பித்தனாகவே கருதிய பொலிஸார் அவரை மனநல மருத்துவமனையில் சேர்க்கக் கருதி அவரை தம்முடன் அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தின் ஓர் அறையில் பூட்டி வைத்தனர். மறுநாள் கதவைத் திறந்து பார்த்தால் சுவாமிகள் அங்கு இல்லை. அவர் பழையபடி பெரியகடைத் தெருவில் உலாவித் திரிந்து கொண்டிருந்தார். அன்றிலிருந்து யாழ்.பொலிஸாரும் சுவாமிகள் பக்தரானார்கள்.

**சுவாமிகளின் சித்து விளையாடல்கள் இவ்வாறு பல.**

சுவாமிகள் தமது இறுதிக் காலத்தில் "நீராவியடி" எனும் தலத்திலேயே தங்கிவிட்டார்கள். சமாதி கூடும் காலத்தை முற்கூட்டியே தமது சீடரான குழந்தைவேல் சுவாமிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். அதன்படி குழந்தைவேல் சுவாமிகள் தமது சுவாமிகளின் ஆணைப்படி சமாதிக்கான முன்னேற்பாடுகளை செய்திருந்தார். எம் குருநாதர் 1891ஆம் வருடம் புரட்டாதி மாதம் பூரட்டாதி நட்சத்திரம் கூடிய நன்னாளில் மகாசமாதி கூடினார். அவர் சமாதி கூடிய இடத்திலேயே மகாசமாதி அமைக்கப்பெற்று அதன்மேல் சிவ ஆலயம் ஒன்றும் அமைக்கப்பெற்றது. ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாதர் தேவஸ்தானமாக திகழும் கடையிற் சுவாமிகளின் சமாதிச்சிவாலயம் அன்பர்களின் முயற்சியினால் இன்று சிறப்பாகக் கட்டி எழுப்பப்பட்டு வேத ஆகம விதிப்படி சிவபூஜை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தைப்பொங்கல், மகாசிவராத்திரி, பிரதோஷம், பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், நவராத்திரி, கௌரிவிரதம், திருவெம்பாவை, கடையிற் சுவாமிகள் குருபூஜை, திருவிழா முதலான முக்கிய திருநாட்கள் இங்கு வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

அடியார்கள் அனைவரும் இப் பூஜைகளில் கலந்து கொண்டு ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாதப் பெருமானின் திருவருளையும் அருட்குரு கடையிற் சுவாமிகளின் குருவருளையும் பெற்று பேரானந்தம் பெறுவோமாக.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்"

(3043)

கடையிற் சுவாமிகள் சமாதிச் சிவாலயம், அடியார்கள்.

# இந்துமக்களின் கடவுள் வணக்க சிலைகள் உடைப்பை கண்டித்து மன்னாரில் நேற்று கவனயீர்ப்பு பேரணி



## இறுதிநேரத்தில் பொலிஸார் அனுமதி மறுப்பு





(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக இந்து மக்களின் கடவுள் வணக்க சிலைகள் உடைக்கப்பட்டு வருவதை கண்டித்து நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் இந்து மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவிருந்த கவனயீர்ப்புப் பேரணிக்கு இறுதிநேரத்தில் மன்னார் பொலிஸார் தடைவிதித்தமையினால் சற்று அமைதியின்மை ஏற்பட்டதோடு, பொலிஸாரின் தடையையும் மீறி கவனயீர்ப்புப் பேரணி இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இந்து மக்களின் கடவுள் வணக்க சிலைகள் உடைக்கப்பட்டு வந்ததோடு, வணக்க சிலைகள் திருடியும் செல்லப்பட்டுள்ளன.

குறித்த சம்பவங்கள் மன்னார் மாவட்டத்திலுள்ள இந்து மக்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியதோடு, மாவட்டத்தில் இன ஒற்றுமையைக் கெடுக்கும் செயற்பாடாகவும் காணப்பட்டது.

இந் நிலையில் குறித்த சம்பவங்களைக் கண்டித்து மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஏற்கனவே உடைக்கப்பட்டு வணக்க சிலைகள் திருடிச் செல்லப்பட்ட "லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு" முன் விசேட மத வழிபாடுகளைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச்செயலகம் வரை அமைதியான முறையில் கவனயீர்ப்புப் பேரணி நடத்த தீர்மானிக்கப்பட்டதோடு உரிய தரப்பினரிடம் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

"லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு" முன் விசேட வழிபாடு இடம்பெற்றது. இதன்போது குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மத வழிபாடு முடிவடைந்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் கவனயீர்ப்புப் பேரணிக்கு அனுமதி மறுத்தனர்.

இதனால் அங்கு கூடி நின்ற மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் சற்று நேரம் தர்க்க நிலை ஏற்பட்டது. இதனையடுத்து குறித்த பகுதியில் சிறிதுநேரம் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் எனப் பலர் அங்கு கூடியிருந்த நிலையில் பொலிஸாரின் தடையையும் மீறி அமைதியான முறையில் மன்னார் மாவட்டச் செயலகம் நோக்கி பேரணியாக நகர்ந்து சென்றனர்.



பின்னர் பேரணியில் கலந்து கொண்டவர்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடி நிற்க "இந்து மகா சபையின்" பிரதிநிதிகள் மாவட்டச் செயலகத்தினுள் சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்ததோடு, குறித்த சம்பவங்களுக்கு துரிதகதியில் தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (2-4-281)

## பேத்தை மீனின் சினையை உட்கொண்ட பெண் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் பேத்தை வகை மீனினத்தை உணவாக உட்கொண்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளம்பில் தங்கபுரத்தைச் சேர்ந்த கோணேஸ்வரன் கௌசல்யா (வயது-38) என்ற குடும்ப பெண் பேத்தை வகை மீனின் சினையை உட்கொண்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த 24 ஆம் திகதி பேத்தை மீன் சினையை வெட்டி உணவாக்கி உண்டுள்ளார்.

இந்த மீனின் சினையில் உள்ள பித்தப்பை கரைந்தால் அது சையனட் அளவு விசமாக மாறிவிடும் என மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மீன் சினையை உட்கொண்ட பிரஸ்தாப பெண் அவதிப்பட்ட நிலையில் உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த 25 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இவரின் குருதி மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## வட்டுவாகல் போராட்டத்தில் ஈடுபட்ட பலரை சட்டத்திற்குமுன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணி அளவீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் செய்தவர்கள் பலரை சட்டத்திற்கு முன் நிறுத்த முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

கடந்த 22 ஆம் திகதி முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை சுவீகரித்து செய்துகொள்ளும் நோக்கில் அளவீடு செய்ய வந்த அதிகாரிகளை மக்கள் பிரதிநிதிகள் மற்றும் காணி உரிமையாளர்கள் போராட்டம் மேற்கொண்டு தடுத்து நிறுத்தியுள்ளார்கள்.

இதில் அரச அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

சிவாஜிலிங்கம் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி முற்பிணை விண்ணப்பத்தை கோரியுள்ளார். இதன் அடிப்படையில் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி இந்த வழக்கை விசாரிக்க திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட்டுவாகல் பகுதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

குற்றவியல் தண்டனை சட்டத்தின் கீழ், பொதுமக்களுக்கு பீதியை ஏற்படுத்தல், அரச ஊழியர் வேலைக்கு இடையூறு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கான வீதியை இடையூறு, கடமையில் இருந்த அரச ஊழியர் மீதான அச்சுறுத்தல், வீதியால் போக்குவரத்தில் ஈடுபட்ட பொது மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கியமை, அரச வாகனத்தை அடித்து சேதப்படுத்தியமை, சட்டவிரோதமான கூட்டம் கூடியமை போன்ற குற்றங்களின் கீழ் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் சி.லோகேஸ்வரன், இளஞ்செழியன், சண்முகலிங்கம் ஆகியோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (2-281)




## பொலிஸ் நிலையம் சமுகமளிக்குமாறு சிவாஜிலிங்கத்துக்கு அழைப்பு

(பனிக்கன்குளம்)

வட்டுவாகல் போராட்டத்தின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நில அளவை திணைக்கள வாகனத்தைச் சேதப்படுத்தியமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நில அளவை திணைக்கள அதிகாரிகளால் கடந்த 22 ஆம் திகதி முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் இரு தரப்பினரையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் நேற்றைய தினம் நில அளவை திணைக்கள அதிகாரிகள் வருகை தந்த போதும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பொலிஸ் நிலையத்துக்கு சமுகமளிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் தொடர்புகொண்டு வினவியபோது, வடக்கு மாகாண சபை அமர்வு இன்று (நேற்று) நடைபெறுவதால் சமுகமளிக்கவில்லை என தெரிவித்தார். (2-281)

## உடுப்புக்குளத்தில் மரக்கடத்தலில் ஈடுபட்ட நபருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் ஊர்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸார் இவரை கைது செய்துள்ளார்கள்.

சட்டவிரோதமான முறையில் பெறுமதியான தேக்க மரங்களை கடத்திச் செல்ல முற்பட்ட கேப்பாபிலவைச் சேர்ந்த ஒருவரை உடுப்புக்குளம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளார்கள்.

முல்லைத்தீவு பொலிஸார் பிரஸ்தாப நபரை நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (2-281)

## வவுனியாவில் ஆடு திருடிய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்

(குருமன்காடு)

வவுனியாவில் ஆடுகளைத் திருடி பொலிஸாரிடம் விற்பனை செய்வதற்கு முயன்ற மூவரை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியா கணேசபுரம் பகுதியில் கடந்த 25 ஆம் திகதி மூன்று ஆடுகளைத் திருடியவர்களை பொலிஸார் தேடிச் சென்ற நிலையில் அவர்களிடம் பொலிஸார் வியாபாரிகள் போன்று சென்று அவர்கள் திருடிய மூன்று ஆடுகளையும் மீட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்நடவடிக்கையில் வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஆட்டோ, மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இவர்களில் இருவர் முஸ்லிம்கள் என்பதுடன் இவர்கள் ஏற்கனவே மாடு திருடிய சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)

# முல்லைத்தீவு மாவட்டத்தில்

## 6,246 பெண்தலைமைத்துவ குடும்பங்களும் 2,296 மாற்றுத்திறனாளிகளும் வாழ்கின்றனர்

### ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கண்டாவளை) —

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களில் ஆறாயிரத்து 246 பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் இரண்டாயிரத்து 296 மாற்றுத்திறனாளிகளும் இருப்பதாக மாவட்ட செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது அடிப்படைத் தகவல்கள் பற்றிய புள்ளிவிபரங்களில் மேற்படி விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 ஆயிரத்து 155 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இதில் 6ஆயிரத்து 246 பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. இதில் 5ஆயிரத்து152 குடும்பங்கள் கணவனை இழந்த நிலையில் காணப்படுகின்றன.

அத்தோடு, 2ஆயிரத்து 296 மாற்றுத்திறனாளிகளும் உள்ளனர்.

இதற்கமைவாக கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 914 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் 444 மாற்றுத்திறனாளிகளும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 729 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் 707 மாற்றுத்திறனாளிகளும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 85 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் 311 மாற்றுத்திறனாளிகளும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 719 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் 443 மாற்றுத்திறனாளிகளும் மாந்தைகிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 462 பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் 316 மாற்றுத் திறனாளிகளும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 337 பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் 75 மாற்றுத் திறனாளிகளும் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் 6ஆயிரத்து 246 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கணவன்மாரை இழந்த 5ஆயிரத்து 152 குடும்பங்களும் 2ஆயிரத்து 296 மாற்றுத்திறனாளிகளும்மனைவியை இழந்த நிலையில் 375 பேரும் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் காரணமாக குடும்பத்தலைவர்களை இழந்த காணாமல்போன நிலையிலும் யுத்தத்தினால் உடல் அவயங்கள் பாதிக்கப்பட்டவர்களும் அதிகளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன் மக்கள் திரண்டு போராட்டம்





(பனிக்கன்குளம்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காணி விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்கள்.இரணைதீவு மக்கள். மன்னார் முள்ளிக்குளம் மக்கள் மற்றும் கொழும்பு, காலி, நீர்கொழும்பு உள்ளிட்ட தென்பகுதி மக்கள் மற்றும் கிழக்கு மாகாண மக்கள் என அனைத்து இடங்களிலிருந்தும் ஒன்றுதிரண்ட மக்கள் முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் பொதுச்சந்தைக்கு முன்பாக இருந்து கவனயீர்ப்பு பேரணிஒன்றைமேற்கொண்டு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் நிறைவு செய்தனர்.

வடக்கு- கிழக்கில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மக்களிடம் வழங்க வேண்டுமெனவும் மக்களிடம் வழங்கப்பட்ட காணிகளில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்த வேண்டுமென வும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (2-281)

# உற்பத்தித்திறன் போட்டிக்கான தெளிவூட்டும் செயலமர்வு

(கண்டாவளை)

தேசிய உற்பத்தித்திறன் விருதுபோட்டி தொடர் 2018 இற்கான தெளிவூட்டும் செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி மாவட்ட செயலகமாநாட்டு மண்டபத்தில் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த போட்டிக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை.அரசதுறை. உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக, காலை 9மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை பாடசாலைத் துறைக்கும் 11மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை அரசதுறைக்கும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை உற்பத்தி மற்றும் சேவைகள் துறைக்கும் நடைபெறும்.

உற்பத்தித்திறன் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் என்பன தம் சார்பான பிரதிநிதிகளை செயலமர்வில்கலந்து கொள்ள ஆவன செய்யுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். இன்று இந்த போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு விரைவில் வைத்தியர் நியமிக்கப்படுவார்

### முல்லை.ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லை.மாவட்ட. ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மாந்தைகிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான மருத்துவசேவையை வழங்கும் வகையில் அமைந்துள்ள நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக வைத்தியர் எவரும் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் இங்கு வாழ்கின்ற மக்கள் தமக்கான மருத்துவ தேவைகளைப் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏற்கனவே வைத்தியசாலையிலிருந்த வைத்தியர் மேலதிக மருத்துவக்கல்விக்காக சென்றுள்ள நிலையில் நிரந்தர வைத்தியர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் கடந்த ஒன்றரை மாதங்களாக இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் எவரும் நியமிக்கப்படாது குறித்த வைத்தியசாலை காணப்படுகின்றது. எனவே ஒரு நிரந்தர வைத்தியரை நியமிக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து இணைத்தலைவர்கள், வடமாகாண சுகாதார அமைச்சர் ஆகியோர் மிக விரைவில் இந்த வைத்தியசாலைக்கான வைத்தியரை நியமிப்பதாக உறுதிபடத்தெரிவித்தனர். (2-315)

# 'சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' மன்னாரில் நடைபெற்ற கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

"சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்" எனும் தொனிப்பொருளில் தேசிய சமாதான பேரவை மற்றும் ஒப்பன் நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தில் இடம் பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் மாவட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலகர் ஏ.மெடோசன் பெரேரா தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் சர்வமதத் தலைவர்கள்,அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர் அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்தின் பின்னர் ஏற்பட வேண்டிய நல்லிணக்கம் தொடர்பிலும், சமயங்களுக்கிடையிலும், மக்களுக்கிடையிலும் ஒற்றுமையினை ஏற்படுத்துதல் மற்றும் முரண்பாடுகளின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சர்வமதத்தலைவர்கள் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து சமயங்களினூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மகாவலி திட்டத்தினூடாக பாவற்குளத்திற்கு நீரை கொண்டுவர அரசு ஆவன செய்ய வேண்டும்

### கமக்கார அமைப்பின் தலைவர் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியாவில் கடும் வரட்சி காரணமாக 4ஆயிரத்து 134 ஏக்கர் நிலம் நெற் செய்கை மேற்கொள்ளப்படவில்லை! மகாவலி திட்டத்தினூடாக நீரை குளத்திற்கு கொண்டுவர அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என பாவற்குளம் கமக்கார அமைப்பின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாவற்குளம் விவசாயக் கிராமத்தில் ஆயிரத்து 378 குடும்பங்கள் நெற் செய்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் இந் நிலங்களை நம்பி கூலித் தொழில் செய்யும் ஆயிரம் குடும்பங்கள் கடும் வரட்சி காரணமாக நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாவற்குளத்தில் தமிழ், சிங்களம்மற்றும் முஸ்லிம்மக்களை சேர்ந்த 11 கமக்கார அமைப்புக்கள் இயங்கி வருவதுடன் பாவற்குளத்திலிருந்து இரண்டு துருசுகள் வழியாக வலது கரையூடாக 2 ஆயிரத்து 310 ஏக்கர் விவசாய நிலத்திற்கும், இடது கரையூடாக ஆயிரத்து 824 ஏக்கர் விவசாய நிலத்திற்கும் நீர் திறந்துவிடப்படுகிறது.

இருந்தபோதும் கடும் வரட்சி காரணமாக பாவற்குளத்தில் 10 அடி தண்ணீரே இருக்கும் நிலையில் துருசுகள் திறக்கப்படும் போது 5 அடி நீரே பாயும்நிலை காணப் படுவதால் அதை வைத்து ஒருவர் கால் ஏக்கர் நிலங்களையே செய்யக்கூடியதாக இருக்கிறது.

முழுமையாக நெற் செய்கையில் ஈடுபட மழையை எதிர்பார்த்து காத்திருப்பதாக கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேட்டு நிலத்தில் மழையை நம்பி நெற் செய்கையில் ஈடுபட்ட 20 குடும்பங்கள் மழை நீர் பொய்த்து போனதால் கிணற்றிலிருந்து நீரை இறைத்து நெற் செய்கையில்ஈடுபட்டதுடன் 20 வீதமான விளைச்சலை பெற்றுக்கொண்டுள்ளதுடன் ஒரு கிலோ நெல்லை 50 ரூபா வீதம் விற்பனை செய்துள்ளதாக தெரிவித்தார். அரசாங்கம் மகாவலித் திட்டத்தினூடாக பாவற்குளத்திற்கு நீரை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் மக்கள் விவசாயத்தை கைவிட்டு வேறு வேலைகளை தேடி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவர் என தெரிவித்தார். (2-250)

# கொடிய வட்டிக் கடன் திட்டங்களை எதிர்த்து யாழில் நேற்று பாரிய கண்டனப் பேரணி









(யாழ்ப்பாணம்) கிராமிய மக்களின் உழைப்பைச் சுரண்டும் கொடிய வட்டிக் கடன் திட்டங்களை எதிர்த்தும், சூறையாடும் நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் மாபெரும் கண்டனப் பேரணி நேற்று யாழில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்தப் பேரணி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து ஆரம்பித்து வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகம் வரை சென்றது.

கட்டுப்பாடற்ற கொடிய வட்டிக்கு கடன் வழங்கும் நுண்நிதி நிறுவனங்களால் மக்கள் பல துன்பங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிராமிய கடன்கள் சரியான முறையில் நெறிப்படுத்தப் பட்டு வழங்கும் நடைமுறை இன்மையால் அவை பயனாளிகளை மீள முடியாத கடனாளியாக்கி ஓர் அனர்த்த நிலைமையையே தோற்றுவித்துள்ளது.

அதிகரித்த வட்டியாக கிராமிய மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு நிதி நிறுவனங்களை நோக்கி செல்வதால் கிராமிய மட்டத்தில் பணப்புழக்கம் குறைக்கப்பட்டு வறுமை நிலை தொடர்கிறது. கடன் தெல்லை தாங்க முடியாது தற்கொலை வரை செல்லும் பரிதாபங்கள் எனப் பல் துன்பங்கள் தொடர்கின்றன.

இவ்வாறான கொடிய நிதி நிறுவனங்களை தடை செய்ய வேண்டும் என்பதுடன் இதற்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் எனக் கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் இறுதியில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோரை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்திருந்தனர்.

இந்த பேரணியில், அனைத்து கூட்டுறவுத்துறை சங்க உறுப்பினர்கள், ஊழியர்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமான கோசங்களை எழுப்பிய வண்ணம் கலந்து கொண்டனர். (இ-9-106)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பிரண்டையும் வயிற்றுப்புண்ணுக்கான மருந்துகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**பிரண்டை**

Botanical Name:- Cissus Guadrangularis
Family:- Vitaceoe
Engl:- Bone-Sette
Sinh:-Hiressa

இது ஏராளமான கிளைக் கொடிகளுடன் பல தூரம் வரைக்கும் வேலி, சிறு செடி, மரம் ஆகியவற்றின் மேல் நன்கு நெருக்கமாகப் படர்ந்து வளரும். நல்ல பச்சை நிறச் சதுரமான கொடியில் 8.10 செ.மீ. இடைவெளியில் கணுக்கள் காணப்படுகின்றன. கணுக்கள் கொடியை விடச் சிறுத்துக் குறுகலாக இருக்கும். கொடியிலுள்ள நான்கு வரம்புகளும் உயரமானவை. அதாவது கொடியின் நான்கு பக்கங்களிலும் லேசான பள்ளங்கள் உண்டு. வரம்புகளில் கருமை நிறக் கோடுகளைக் காணலாம்.

கணுவிற்கு ஒன்றாக மாறி மாறி அமைந்துள்ள இலை சிறிது விருத்த வடிவமும் தடிப்பும் பச்சை நிறமும் உடையது. ஒவ்வொரு கணுவிலும் சிற்றிலையும் பற்றுக் கொடியுமுண்டு. கொடியின் உற்புறத்தில் நல்ல பச்சை நிறத்தையும் அதிக நாரும் காணப்படுகின்றன. இளங்கொடி நுனிக்கொடி மட்டுமே நாரற்று ஒடியக் கூடியது.

**பரம்பலும் இனவிருத்தியும்**

பொதுவாக வெப்பமான இடங்களில் அதிகமாகக் காணலாம். யாழ்.மாவட்டத்தில் தரிசு நிலங்களில் பொதுவாக பரம்பலை அவதானிக்கலாம். கணுவுள்ள துண்டுகளை நட்டு பயிரிடலாம்.

**சத்துக்கள்**

100 கிராம் பிரண்டையில் உள்ள சத்துக்கள் (கிராமில்) புரதம் 1.2, கொழுப்பு 0.3, நார்ப்பொருள் 1.8, மாச்சத்து 7.3, கல்சியம் 650 மி.கி., பொஸ்பரஸ் 50 மி.கி., இரும்பு 2.1 மி.கி., உயிர்ச்சத்து Cயும் காணப்படும்.

**மருத்துவப் பயன்கள்**

இதன் இலைகளைக் கலவைக்கீரையும் சேர்த்து சமைத்து சாப்பிட அஜீரணம் தீரும். மலத்தை இளக்கும். நாரில்லாத இளம் நுனிக்கொடியில் ஒரு துண்டை எடுத்து அத்துடன் வல்லாரை, புளியாரை, கொத்தமல்லிக்கீரை, புதினா இவற்றில் ஏதாவது ஒன்றிரண்டு இன இலைகளைச் சேர்த்து அத்துடன் தேங்காய், தக்காளி, கரட் சேர்த்து சட்னி செய்து உண்ண உடலுக்கு வலுவைத் தரும்.

குடற்புழுக்களை கொல்லும் தன்மையும் உண்டு. பிரண்டையை இடித்து சாறு பிழிந்து அத்துடன் புளி, உப்பு சேர்த்துக் காய்ச்சி குழம்பு பதம் வரும் சமயம் இறக்கி சூடு தாங்குமளவுக்கு பற்றுப் போட சுளுக்கு, சதை பிரளுதல், எலும்பு முறிவினால் ஏற்பட்ட வீக்கம் தீரும். அடிபட்ட வீக்கத்திற்கும் இதனை பற்றிடலாம்.

"சதை பிரண்டலும் சரி செய்திடும் பிரண்டை" என்பது ஒரு பழமொழி. அனுபவ மொழியாகும். இளந்தண்டை இலையுடன் உலர்த்திப் பொடித்து பாலில் கலந்து சிறிது கற்கண்டு சேர்த்து அருந்த உடலைத் தேற்றி வன்மையைக் கொடுத்தும்.

இதன் வேர்களை சேகரித்து உலர்த்திப் பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை அருந்தி வர முறிந்த என்புகளை பொருந்தவைக்கும் தன்மையை ஏற்படுத்தும். இதையே வெந்நீரில் குழைத்து மேலுக்குப் பற்றிடலாம். இதன் ஆங்கிலப்பெயர் Bone Setter என்பதும் குறிப்பிடப் பட வேண்டும்.

இம்முறை இன்னும் சில பரம்பரை வைத்தியர்களால் பயன்படுத்தப்பட்டும் வருகின்றது கவனத்தில் கொள்ளப் பட வேண்டிய விடயமாகும். பிரண்டையின் மருத்துவப் பயன்களில் பிரண்டை உப்பு முக்கியமான மருத்துவப் பிரயோக முறையாகும்.

பிரண்டைச் செடிகளை சேகரித்து உலர்த்தி சுத்தமான சீமெந்துத் தரையில் கொளுத்தி சாம்பல் எடுக்கவும். இந்த சாம்பலில் ஒரு லீற்றரை மண் சட்டியில் எடுத்துக் கொண்டு அத்துடன் 3 லீற்றர் தண்ணீர் சேர்த்து கலக்கி 12 மணி நேரம் தெளிய வைக்கவும். தெளிந்த நீரை வேறொரு மண் சட்டியில், இறுத்து பின்பு நன்கு கலக்கவும். இவ்வாறு 2 அல்லது 3 முறை செய்த பின் தெளிந்த பிரண்டை சாம்பல் நீரை எடுத்து அடுப்பிலிட்டு சிறு தீயைக்கொண்டு காய்ச்சி குழம்பு பதத்தில் பீங்கான் தட்டில் ஊற்றி குளிர வைத்துப் பார்க்க உப்பு பல கட்டிகளாக தோன்றியிருக்கும். இதுவே பிரண்டை உப்பு எனப்படும்.

Botanical Name:- Mentha arvensis
Family:-Labiatae
Engl:-Marsh mint
Sinh:-odutalan

இது அதிக தூரம் படர்ந்து வளராத ஓர் வகைச்செடி. கணுக்களில் வேர்கள் தோன்றி மண்ணைப் பற்றிக்கொள்ளும். இது பூமியில் நெடுகிலும் கிழங்கு போன்ற வேரை விட்டுக் கொண்டு படர்ந்து செல்லும். சில வெண்மையாகவும் சில சிவப்பாகவும் 3.4 மி.மீ.கனமுள்ளதாகவுமிருக்கும். இதன் இலைகள் 2 முதல் 3.5 செ.மீ. நீளமும் 1 முதல் 2 செ.மீ. அகலமும் உள்ளதையும் ஓரம் இரம்ப வாய் போன்ற அமைப்பையும் உடையதாய் இருக்கும். இலையில் நரம்புகள் ஓடி இருக்குமிடமெல்லாம் மேல் புறத்தில் பள்ளமாகவும் அடிப்புறத்தில் மேடாகவும் அமைந்திருக்கும்.

**கிடைக்குமிடமும் பயிரிடுதலும்**

மிதமான சீதோஷ்ண இடங்களில் எங்கும் தானாக முளைத்திருக்கும். கிழங்குகளை ஒடித்தெடுத்தும் கொடிகளை நட்டும் விதைகளைத் தூவியும் பயிரிடலாம். ஐப்பசி மாதம் நடலாம். 45 நாட்களில் இலைகளை பறித்தெடுக்கலாம். ஒருமுறை நட்ட செடியிலிருந்து 3 ஆண் டுகள் வரை பயன் எடுக்கலாம். வீட்டுத்தோட்டங்களில்நாம் இதனை பயிரிட்டு வளர்க்கலாம்.

யாழ்.மாவட்டத்தில் சித்த மருத்துவத்துறை கைதடி, திருநெல்வேலி விவசாயப் பண்ணை போன்ற இடங்களில் அடையாளப்படுத்துவதற்காக பயிரிடப்பட்டுள்ளது. ஓர் சில விவசாயிகள் பயிரிட்டு வளர்க்கின்றார்கள். புதினாவின் பயன்களை அறியாமையே அவற்றை பயிரிட்டு சந்தைப்படுத்தாமைக்குரிய முக்கிய காரணமாகும்.

**மருந்துச் சத்துக்கள்**

100 கிராம் புதினா இலையில் புரதம் 4.8, கொழுப்பு 0.6, நார்ப்பொருள் 2.0, மாச்சத்து 5.8, கல்சியம் 200 மி.கி., விற்றமின் C 27 மி.கி., ஓக்ஸாலிக்கமிலம் 33 மி.கி., பொஸ்பரஸ் 4 மி.கி., போலிக் கமிலம் 114 மைக்கிரோ கிராம்.

**மருத்துவப் பண்புகள்**

1. புதினா இலைகளுடன் புளி, உப்பு, மிளகாய் ஆகியவற்றை அளவாகச் சேர்த்து அரைத்து துவையல் தயாரித்து சோற்றில் பிசைந்து உண்ண நல்ல பசி உண்டாகும். சிறுநீர் நன்கு கழியும்.

2. புதினாக்கீரை, உளுத்தம் பருப்பு, பொட்டுக்கடலை, புளி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்தரைத்து சிறிதளவு வாயில் போட்டு தண்ணீர் குடிக்க குமட்டல், வாந்தி குணமாகும்.

3.புதினாக் கீரையுடன் சிறிதளவு இஞ்சி, சிறிதளவு மிளகு, அளவாகப் பனை வெல்லம் சேர்த்து தண்ணீர் கூட்டி அடுப்பில் வைத்து சுண்டக்காய்ச்சிய குடிநீரை பருக வாந்தி, வயிற்றுப் பொருமல், பசியின்மை தீரும்.

4.புதினாக்கீரையை உலர்த்தி பொடித்து தேனில் குழைத்து உட்கொள்ள மாதவிடாய் தாமதமாகாமல் ஒழுங்காகும். இத்தூளைக் கொண்டு பல்துலக்கினால் பற்கள் வெண்மையடையும்.

5. புதினாக்கீரைப் பொடியையும் திப்பிலித்தூளையும் சமபாகம் எடுத்து தேனில் குழைத்து நாக்கில் தடவ விக்கல் நிற்கும்.

6.கால் எரிச்சலுக்கு இக்கீரையுடன் உப்பைக் கலந்து ஒத்தடம் கொடுக்கலாம்.

7.இலைகளை சிறிதளவு நீர்சேர்த்து அரைத்து பாக்களவு உண்ண வயிற்றுப்புண் ஆறும். வயிற்றுப்புண்ணிற்கு இக்கீரை சிறந்த மருந்தாகும். இக்கீரையிலிருந்து வாசனை எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது.

# பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கைது
# எஸ்.ரி.எப்., உளவுத்துறை இணைந்து அதிரடி

(கொழும்பு)

தெமட்டகொடை பகுதியில் நவீன ரக மோட்டார் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் ஐந்து பேரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

முகத்துவாரம் பகுதியில் பிரபல பாதாள உலக தலைவனாக கருதப்படும் வெல்லே சாரங்கவின் சகாக்கள் எனக் கருதப்படும் ஐவரையே இவ்வாறு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்படும் போது, அவர்களிடம் 8 வாள்களும், மூன்று இராணுவச் சீருடைத் தொகுதிகளும் இருந்ததாக பொலிஸ் அதிரடிப் படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் குறித்த பாதாள உலகக் குழு, தமக்கு எதிரான மற்றொரு குழுவினருக்கு எதிராக குற்றம் ஒன்றினை அரங்கேற்றும் நோக்குடன் இவ்வாறு சென்று கொண்டிருந்துள்ளமை தொடர்பில் சந்தேகிக்கும் படியான தகவல்களை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் தொடர்கின்ற நிலையில், சந்தேக நபர்கள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தண்ணீரிலிருந்து வெளிவந்த தூபி பார்க்க படையெடுப்பு மக்கள் கூட்டம்









(கொழும்பு)

கொத்மலை நீர்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளமையினால் நீரில் மூழ்கியிருந்த வணக்கஸ்தலங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன.

அண்மைக்காலமாக மலையகத்தில் வரட்சியான கால நிலை ஏற்பட்டிருந்த நிலையில் நீர் நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது.

1979 ஆம் ஆண்டு கொத்மலை அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்ட போது பழைமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க விகாரை மற்றும் ஆலயம் என்பன நீரில் மூழ்கின.

இந்நிலையில் தற்போது நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளமையினால் நீரில் மூழ்கியிருந்த வணக்கஸ்தலங்கள் தென்படுவதுடன் அதனை பார்வையிட பொதுமக்கள் படையெடுத்துள்ளனர். (இ-7)

# ஊடகங்களே அரசின் தோல்விக்கு காரணம்
## சந்திரிகா புகார்



(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சரியான தகவலை மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு ஊடகங்களைச் சார்ந்ததாகும் எனவும், கடந்த காலங்களில் அது உரிய முறையில் நிறைவேற்றப்படாமையே தேர்தல் தோல்விக்குக் காரணம் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

சில தரப்பினர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் செயற்றிட்டங்களை மூடி மறைத்து பொய் பிரசாரங்களை முன்னெடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஊழலும், இனப்பிரச்சினையும் இலங்கை தற்போது எதிர்கொள்ளும் முக்கியமான இரண்டு நெருக்கடிகளாகும் என்றும் இந்த நெருக்கடியை நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுவதன் மூலமே தீர்த்து வைக்க முடியும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தர். (இ-7)

# காணாமற்போன மாணவன் நேற்று சடலமாக கண்டெடுப்பு

(கொழும்பு)

இரு தினங்களுக்கு முன்னர் காணாமற்போன ஒன்பது வயது பாடசாலை மாணவனின் சடலம், நேற்று செவ்வாய்க்கிழமை சிலாபம், இரனவல பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் இனந்தெரியாத நபரினால் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியாகியுள்ளது.

மாணவனின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அகில இலங்கை கம்பன் கழகம் வழங்கும் பல்கலை. மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

(கொழும்பு)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் வெள்ளவத்தையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் வடக்கு, கிழக்கு, மலையக பிரதேசங்களைச் சார்ந்த வசதி குறைந்த மாணவர் மூவருக்கும் இலங்கையின் மற்றைய பிரதேச மாணவர் ஒருவருக்குமாக நான்கு பேருக்கு கல்வி முயற்சிக்கான புலமைப்பரிசில்களை வழங்கக் கம்பன் கழகம் முடிவு செய்துள்ளது.

ஒவ்வொன்றும் ரூபா 50 ஆயிரம் பெறுமதியான இப் புலமைப் பரிசில்களுக்காக பதின் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் பாடசாலை மாணவரும், பல்கலைக்கழகப் புதுமுக வகுப்பு மாணவரும் விண்ணப்பிக்க முடியும்.

மேற்படி மாணவர்கள் தமது கல்வி, பொருளாதார நிலைகளை சமாதான நீதவான், அல்லது கல்லூரி அதிபர் ஆகியோரில் ஒருவரிடம் உறுதிப்படுத்தி மேற்படி புலமைப் பரிசிலுக்காக இல. 12, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு-06 எனும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

கடித உறையின் இடப் பக்க மேல் மூலையில் கம்பன் புலமைப்பரிசில் என்று தலைப்பிட்டு தாம் வாழும் பிரதேசம், குடும்ப உறுப்பினர் தொகை, பெற்றோர், சகோதரர் தொழில் நிலை, படித்த அல்லது படிக்கும் கல்லூரி, தொலைபேசி இலக்கம், முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும். பதின்மூன்றாம் ஆண்டு மாணவர்கள் க.பொ. த. (சா/த) பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தினதும் பல்கலைக்கழக ஆண்டு மாணவர்கள் க.பொ. த. (சா/த, உ/த) பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தினதும் நிழற்படப் பிரதிகளை இணைத்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் 011 236 0525 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் கம்பன் கழகம் அறிவித்துள்ளது. (இ-7)

# பயிற்சிக்காக சீனா செல்லவுள்ள பிரிகேடியர் பிரியங்க



(கொழும்பு)

பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக பதவி வகித்த நிலையில் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ சீனாவில் பயிற்சி பாடநெறி ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

5 மாதத்துக்கான குறித்த பயிற்சி பாடநெறியைத் தொடர்வதற்காக, பிரியங்கர நாளை மறுதினம் 2ஆம் திகதி சீனாவுக்கு செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

லண்டனில் கடந்த 4 ஆம் திகதி புலம்பெயர் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது அவர்களை நோக்கி கழுத்தை அறுத்து விடுவேன் என்று எச்சரிக்கை விடுத்து சர்ச்சையில் சிக்கியவர் பிரியங்க பெர்னாண்டோ என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாரதம்

## சட்டசபையில் ஜெயலலிதா படம் வைப்பு மக்கள் எதிர்த்தால் தேர்தலில் தெரியவரும்

### நீதிபதிகள் தெரிவிப்பு



(சென்னை)

ஜெயலலிதா படத்தை சட்டசபையில் வைப்பதை பொதுமக்கள் விரும்பவில்லை என்றால் சட்டசபை தேர்தலில்' எதிரொலிக்கும் என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரி வித்துள்ளனர்.

தமிழக சட்டசபையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகைப்படம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த புகைப்படம் திறப்பதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றில் தி.மு.க. எம்.எல்.ஏ. ஜெ. அன்பழகன் வழக்கு தொடர்ந்தார்.

'சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற ஜெயலலிதாவின் புகைப்படத்தை சட்டசபையில் விதிகளை மீறி சபாநாயகர் திறந்து வைத்துள்ளார். ஜெயலலிதாவின் புகைப்படத்தை அகற்ற வேண்டும்' என்று கூறியிருந்தார்.

உயர் நீதிமன்றினால் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட நபரின் படத்தை சட்ட சபையில் வைத்துள்ளனர். இதை அனுமதித்தால், எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்களில் ரவுடிகளின் படங்களை பெரிய அளவில் வைக்கும் நிலை ஏற்பட்டு விடும். சட்ட சபையில் ஜெயலலிதா புகைப் படத்தை வைப்பது என்பது சபாநாயகரின் நிர்வாக அதிகாரத்துக்கு உட்பட்டது. அதில், நீதிமன்றம் தலையிட முடியாது என்று இந்த உயர் நீதிமன்றம் முடிவு செய்யக்கூடாது. அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு எதிராக சபாநாயகர் செயற்படும்போது, அதில் உயர் நீதிமன்றம் தலையிட முடியும் என்று உச்சநீதிமன்றம் பல்வேறு தீர்ப்புகளில் கூறியுள்ளது'

'மக்களின் வரிப்பணத்தில் தான் சட்டசபையும், தமிழக அரசும் இயங்குகின்றன. அப்படி இருக்கும் போது, வரிப்பணத்தில் ஜெயலலிதாவுக்கு படம் வைப்பது என்பது சட்டவிரோதமானது' என மனுதாரரின் சட்டத்தரணி வாதிட்டார்.

அப்போது நீதிபதிகள் குறுக்கிட்டு, 'ஜெயலலிதா படத்தை சட்டசபையில் வைப்பதை பொதுமக்கள் எதிர்த்தால், அந்த எதிர்ப்பு வரும் சட்டசபை தேர்தலில் எதிரொலிக்கும். மேலும், இந்த புகைப் படம் சட்டசபையில் இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை எதிர்காலத்தில் சபாநாயகராக வரும் நபர்கள் முடிவு செய்து கொள்ளட்டும். ஜெயலலிதாவின் படத்தை சட்டசபையில் வைப்பது என்பது சபாநாயகரின் அதி கார வரம்புக்கு உட்பட்டது என்பதால், அதில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது. 18 எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் என்பது தனி மனித உரிமை சம்பந்தப்பட்டது என்பதால், அதுதொடர்பான வழக்கை உயர் நீதிமன்றம் விசாரித்தது' என தெரிவித்து விசாரணையை எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (10)

## பப்புவா நியூகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்; 30 பேர் பலி,300 பேர் படுகாயம்

(பப்புவா நியூகினியா)

பப்புவா நியூகினியாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பட்டநில நடுக்கத்தில் சிக்கி 30 பேர் பலியானதாக நம்பப்படுகிறது.

பசுபிக் தீவு நாடான பப்புவா நியூகினியாவின் போர்கேரா மாகாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.5 ஆக பதிவாகியது. 35 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடனடி தகவல் ஏதும் வராத நிலையில் பப்புவா நியூ கினிய அரசு நேற்று செவ்வாய்க்கிழமை நிலநடுக்கத்தில் 30 பேர் வரை இறந்திருக்கலாம் என்றும் 300 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் தொலைபேசி தொடர்புகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (10)

## மோடியின் வெளிநாட்டுப் பயண செலவை வெளியிடுங்கள்

### மத்திய அரசுக்கு சிஐசி உத்தரவு

(டில்லி)

கடந்த 2013-ம் ஆண்டு முதல் 2017-ம் ஆண்டு வரை ஏர் இந்திய விமானத்தை பயன்படுத்தி பிரதமர் நரேந்திர மோடி வெளிநாடு பயணம்மேற்கொண்டதில் அந்த நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு?, ஒட்டுமொத்த செலவு உள்ளிட்ட விபரங்களை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட வேண்டும் என்று மத்திய தலைமைத் தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பிரதமர் மோடி கடந்த 2013 முதல் 2017ஆம் ஆண்டு வரை ஏர் இந்தியா விமானம் மூலம் வெளிநாடு பயணம் சென்றதில், ஏற்பட்ட செலவுகள், நிறுவனத்துக்கு அரசு வழங்கிய தொகை, செலுத்த வேண்டிய நிலுவை தொகை, இன்வாய்ஸ், ஒட்டுமொத்த செலவு உள்ளிட்ட முழுமையான தகவல்கள் தேவை எனக் கோரி மத்திய தலைமைத் தகவல் ஆணையத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

செலவு விபரங்கள் நாட்டின் மக்களுக்கு தெரியப்படுத்துவது அவசியம். அதே போல பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணத்துக்கான செலவில் ஏர் இந்தியா நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையையும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இந்த செலவு விபரங் களை வெளியிடுவதால், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நேரும் எனக் கூறுவதை ஏற்க முடியாது. நுகர் வோருக்கும், மக்களுக்கும் சேவை அளிக்கும் ஏர் இந்தியா நிறுவனத்துக்கு அரசு வைத்துள்ள நிலுவைத் தொகையை வெளியிடுவது கடமையாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதற்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பல்வேறு கால கட்டங்களில் உள்ள அதிகாரிகளால் செலவுத்தொகை குறிப்பிடப்பட்டுள்ளதால் அதைத் தேடி வெளியிடுவதில் சிரமம் என்று கூறப்பட்டது.

தகவல் ஆணையர் ஆர்.கே. மாத்தூரின் உத்தரவில், "பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணத்துக்கான செலவு விபரங்கள், இந்திய விமானப்படை, ஏர் இந்தியா ஆகியவை திகதி வாரியாக அளித்த பில், செலுத்தப்பட்ட தொகை, மத்திய அரசு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை உள்ளிட்ட விபரங்களை உடன் வெளியிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## இரசாயனத் தாக்கு

## உயிருக்கு போராடும் கு

### சிரியாவில் தொடரும் சோகம்



(டமாஸ்கஸ்)

சிரியாவில்அரசுகுழந்தைகளை குறிவைத்தே இரசாயனத் தாக்குதல் நடத்தப்படுவதும் தெரியவந்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிரியா நாட்டில் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில், சமீபத்திய தாக்குதல்களின் காரணமாக இதுவரை 600 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரின் நிலை குறித்து சமூக வலைத்தளங்களில் வெளியான படங்கள் இதயத்தை கலங்கச் செய்யும் வகையில் உள்ளன.

போர் நிறுத்தம் என்று கூறப்பட்டாலும் கடந்த சில நாட்களாக அரசுப்படையினர் தலைநகர் டமாஸ்கஸ் அருகே உள்ள கவுட்டா என்று பகுதி மீது தாக்குதல் நடத்தியது.

கடந்த 2013ஆம் ஆண்டுக்கு பிறகு இப்படி ஓர் அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா நாட்டில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அரசுப் படையினர் கடந்த 7 நாட்களாக தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றனர். சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, நிகழ்த்தப்பட்டு வரும் விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல்களில் 500-க்கும் மேற்பட்டவர்கள் பலி

## பிரித்தானியாவில் தீவிரவாத அச்சுறுத்தல் தீவிரவாத ஒழிப்பு பிரிவினர் எச்சரிக்கை

(லண்டன்)

பிரித்தானியா புதிய வகையான தீவிரவாத அச்சுறுத்தலை தற்போது எதிர்நோக்குவதாக, பிரித்தானியாவின் தீவிரவாத ஒழிப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் எச்சரித்துள்ளார்.



லண்டனில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, தீவிரவாத ஒழிப்புப் பிரிவின் உதவி ஆணையாளர் மார்க் ரொவ்லி (Mark Rowley) இந்த எச்சரிக்கையை விடுத்ததாக, சர்வதேச ஊடகங்கள் நேற்று முன்தினம் திங்கட் கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

பிரித்தானியாவின் தற்போதைய நிலைமை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது.

'பிரித்தானியாவில் தற்போது தீவிர வலது சாரி தீவிரவாத அச்சுறுத்தல் காணப்படுவதுடன், பொது மக்களுக்கு இது மிகவும் சவாலானதாக அமையும்.

பிரித்தானியாவில் நிலவும் தீவிர வலதுசாரி தீவிரவாதம் தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ள அவர், சர்வதேச் தீவிரவாதிகளுடன் பிரித்தானியக் குழுக்கள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, பிரித்தானியாவில் கடந்த வருடத்தில் 5 தீவிரவாதத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், 3 ஆயிரம் சந்தேக நபர்கள் சம்பந்தப்பட்ட 600 தீவிரவாதச் சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## வியாழன் துணை உயிரினங்கள் வ

### ஆய்வில் புதிய தகவல்

(வோஷிங்டன்)

வியாழன் கிரகத்தின் துணை கிரகமான யூரோப்பா முழுவதும் ஐஸ்கட்டியால் ஆனது. இங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வியாழன் கிரகத்தின் துணை கிரகம், யூரோப்பா. இது முழுவதும் ஐஸ் கட்டியால் ஆனது. இங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்ற விபரம்

## சவுதி இராணு பெண்களு

(ரியாத்)

சவுதி அரேபியாவில் பெண்களும் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான் சவுதி அரேபியா விஷன் 2030 என்ற தொலைநோக்குத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.

சில நாட்களுக்கு முன் சவுதி பெண்கள் ஆண்களில் அனுமதி இல்லாமலேயே தொழில் தொடங்கலாம் என்று அறிவித்திருந்தது. முன்னதாக,



# வெளிநாடு



## குதல்களால்

## குழந்தைகள்

யாகியுள்ளதாக போர் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

3000 பேர் வரை மோசமான காயங்களால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் 15 வயதுக்கும் குறைவான சிறுவர், சிறுமிகளே. குழந்தைகளை குறிவைத்தே இரசாயன தாக்குதல் நடத்தப்படுவதும் தெரியவந்துள்ளது.

போரில் இறந்த நபர்களில் 65 சதவிகிதம் பேர் குழந்தைகள். மேலும் காயம் அடைந்த 80 சதவிகிதம் பேர் குழந்தைகள். யுத்தகளத்திலிருக்கும் இருக்கும் 3.98.859 பேரில் 50 சதவிகிதம் பேர் குழந்தைகளாக இருக்கலாம் என்று ஐ.நா. தெரிவித்து இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு மன்றம், கடந்த சனிக்கிழமை சிரியாவில் தற்காலிக போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளபோதிலும், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் மீது சிரியா அரச படைகள் விமானத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இரசாயனத் தாக்குதலில் அகப்பட் சிறுவர்கள் ஒட்சிசன் பற்றாக்குறையில் மூச்சுத்திணறி உயிரிழந்து வருவதாகவும் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சையளிக்க முடியாதவாறு தொடர்குண்டுத் தாக்குதல் இடம்பெற்று வருவதாக ஐ.நா. போர்க் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (10)



## தடைகளை தகர்த்து இரண்டு தடவைக்கு மேல் சீன வல்லரசின் ஜனாதிபதியாக ஜின்பிங் தகுதி

(பீஜிங்)

சீன ஜனாதிபதியாக உள்ள ஜின்பிங் (வயது 64), நாட்டின் வலிமை மிக்க தலைவராக திகழ்கிறார்.

சீன கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் மற்றும் இராணுவத்தின் தலைவர் பதவியையும் அவர்தான் வகித்து வருகிறார்.



அவர் தொடர்ந்து 2ஆவது முறையாக ஜனாதிபதியாக கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டார். 2023ஆம் ஆண்டு இந்த பதவிக்காலம் முடிகிறது. அங்கு ஒருவர் 2 முறைக்கு மேல் தொடர்ந்து ஜனாதிபதி பதவி வகிக்க முடியாதபடிக்கு தடை உள்ளது. இந்த தடையை அகற்ற இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சீன அரசியல் சட்டத்தில் உள்ள பிரிவை நீக்குவது என சீன கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியகுழு முடிவு எடுத்து இருக்கிறது.

இதன்மூலம் சீன ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் 2 முறைக்கு மேல் தொடர்ந்து பதவி வகிக்க முடியும். இந்த தகவலை சீன அரசின் 'சின்குவா' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் ஆதிக்கம் தொடர்ந்தும் வல்லரசு நாடுகளுக்கு சவாலாக இருக்கும்படி ஜனாதிபதியின் ஆட்சிக் காலம் பல தடைகளை மீறி மாற்றியமைக்கப்பட்டது என சர்வதேச நாட்டின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (10)

## அமெரிக்காவுடன் வடகொரியா சமாதானப் பேச்சுக்குத் தயார்

(சியோல்)

கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்றத்தை தணிக்க அமெரிக்காவுடன் சமாதான பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் அண்டை நாடான தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமாக பல்வேறு ஏவுகணை சோதனைகளை நடத்தினார்.



தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா நேசக்கரம் நீட்டியதும், வோஷிங்டனையும் மிரட்டும் விதத்தில் அணுகுண்டு சோதனை, கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன சோதனைகளை நடத்தினார்.

மேலும் கிம் ஜாங் உன், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சீண்டும் விதமாக பேசி வந்தார். இதனால் எரிச்சல் அடைந்த அமெரிக்கா, கொரிய தீபகற்பத்தில் போர் விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்களை அனுப்பி அப்பகுதியை தீவிரமாக கண்காணித்து வருகிறது. தென்கொரியாவுக்கு போர் பயிற்சியும் அளிக்கிறது. இதைத் தொடர்ந்து இப்பகுதியில் கடந்த ஒரு வருடமாக போர் பதற்றம் நீடித்து வருகிறது.

சமீபகாலமாக கிம் ஜாங் உன்னின் போக்கு மாறத் தொடங்கி இருப்பதாகவும், அமெரிக்காவுடன் நட்புறவு மேற்கொள்ள விரும்புவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. விதித்த பல்வேறு பொருளாதார தடைகளால் வடகொரியா இந்த முடிவுக்கு வந்திருப்பதாக கருதப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக தென்கொரியாவின் பியாங்யாங் நகரில் நடந்த குளிர் கால ஒலிம்பிக் போட்டியில் தென்கொரியா, வடகொரியா அணிகள் ஒரே கொடியின் கீழ் ஒரே அணியாக பங்கேற்றனர்.

ஒலிம்பிக் போட்டியின் நிறைவு நாள் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை 2010ஆம் ஆண்டு 50 தென்கொரியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு மூளையாக செயற்பட்டவர் எனகருதப்படும் வடகொரிய தூதர் கிம் யோங் சோல் கலந்து கொண்டு வியப்பை ஏற்படுத்தினார்.

இது அமெரிக்காவுடன், வடகொரியா நேசக்கரம் நீட்ட விரும்புவதையே காட்டுகிறது என்று சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவின்போது சிறப்பு விருந்தினர்களுக்கான பகுதியில் கிம் யோங் சோல்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மகள் இவாங்கா மற்றும் கொரிய தீபகற்பத்துக்கான அமெரிக்க இராணுவ தளபதி வின்சென்ட் புரூக்ஸ் ஆகியோரின் அருகில் அமர்ந்திருந்ததும், விழாவில் தென்கொரியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது அவர் எழுந்து நின்று மரியாதை செய்ததும் இதற்கு உதாரணமாக காட்டப்படுகிறது.

வடகொரிய தூதர் கிம் யோங் சோல் குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவுக்கு முன்னதாக தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னையும் சந்தித்து பேசினார். கிம் யோங் சோல், வடகொரிய ஜனாதிபதி அமெரிக்காவுடன் நட்புறவை மேம்படுத்திக்கொள்ள விரும்புவதாகவும், இதற்காக தாராளமாக பேச்சு வார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதற்கு மூன் ஜே இன் அமெரிக்காவும், வடகொரியாவும் கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்றத்தை முடிவுக்கு கொண்டுவர விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி அடிப்படைபூர்வமாக தீர்வு காணவேண்டும் என்று யோசனை தெரிவித்தார்.

வட கொரிய தூதர் கிம் யோங் சோலை தென்கொரியாவுக்குவர அனுமதித்ததை கண்டித்து 200க்கும் மேற்பட்டோர் குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழா நடந்த மைதானத்தின் வெளியே திரண்டு தென்கொரிய - அமெரிக்க கொடிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது 50 பேரின் படுகொலைக்கு காரணமான கிம் ஜோங் சோலை நரகத்துக்கு அனுப்பு என்று அவர்கள் கோஷமிட்டனர். எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ணைக்கிரகத்தில் ள் வாழ முடியும்

ல்

அண்மையில் வெளியாகியுள்ளது.

பிரேசில் நாட்டின் சாவ் பாவ்லோ பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் அண்மையில் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர். யூரோப்பா துணை கண்டம் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்கள் பூமியுடன் ஒத்துப்போவதை கண்டறிந்தனர்.

தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க் அருகே போங்யாங் தங்க சுரங்கத்தின் 2.8 கி.மீற்றர் ஆழத்தில் மிகப் பெரிய மாற்றங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சூரிய ஒளிபடாத அங்கு தண்ணீரில் பக்றீரியாக்கள் உயிர் வாழ்வதும் கதிரியக்கங்கள் ஏற்படுவதும் தெரிய வந்தது.

அதே போன்ற நிலை யூரோப்பா துணை கிரகத்தின் நிலப்பரப்பிலும் உள்ளது. அங்குள்ள நில மேற்பரப்பில் ஐஸ்படுகையின் 10 கி.மீற்றர் ஆழத்தில் கடல் போன்ற தண்ணீர் மறைந்துள்ளது. அதில் உயிரினங்கள் வாழும் சூழ்நிலை இருக்கலாம் என கருதப்படுகிறது. (10)

## ாணுவத்தில் இணைய ளுக்கு அனுமதி

இந்த ஆண்டு ஜனவரியில் அரசின் அதிகாரபூர்வ முடிவுகளை எடுப்பதற்கு பெண்களுக்கு அனுமதி வழங்கியது. பெண்கள் கார் ஓட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெண்களும் அந்நாட்டு இராணுவத்தில் பணியாற்ற அனுமதி வழங்குவதாக கடந்த ஞாயிற்றுக் கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. ரியாத், மக்கா, அல் குசைம் மற்றும் அல் மதீனா உள்ளிட்ட மாகாணங்களைச் சேர்ந்த பெண்கள் இராணுவத்தில் சாதாரண வீராங்கனைகளாக இணைய விண்ணப்பிக்க லாம்.

எண்ணெய் வளத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தையே பெரிதும் நம்பியிருக்க வேண்டிய சூழலுக்கு மாற்றாகவும் பொருளாதாரத்தை விரிவு செய்யும் நோக்கிலும் பெண்கள் பொருள் ஈட்டும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (10)

## இத்தாலியை உறையவைக்கும் பனிப்பொழிவு மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம்

(ரோம்)

இத்தாலியில் கடுமையான பனிப்பொழிவு காணப்படும் நிலையில், பல இடங்களில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளதுடன் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய இத்தாலியில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுவதுடன், வீதிகளிலும் பனிக்கட்டிகள் உறைந்துள்ளன.



இதனையடுத்து, பல இடங்களில் வீதிகளூடனான போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

தலைநகர் ரோமிலுள்ள கொலோசியம் அரங்கம் உள்ளிட்ட சுற்றுலா நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை, பனிப்பொழிவால் உறைந்து காணப்படும் நகரைப் பார்ப்பதில் வியப்பாக உள்ளதாக, பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (10)

## பெரும்பான்மை இளைஞர்கள் தாக்குதல்

# அம்பாறையில் அதிகாலை பதற்றம் பள்ளிவாசல், கடைகள் சேதம்



(அம்பாறை)

அம்பாறை நகரில் அதிகாலை இடம்பெற்ற கைகலப்பில் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றும், கடைகள் சிலவும் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் உணவகம் ஒன்றுக்கு உணவருந்த வருகைதந்த பெரும்பான்மை இளைஞர்கள் சிலர் உணவக உரிமையாளருடன் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து உணவகத்துக்கு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதேவேளை அங்குள்ள மற்றுமொரு வர்த்தக நிலையத்திற்கும் தீ வைத்துவிட்டு, பள்ளிவாசலுக்கும் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் பள்ளிவாசலின் மதில் சேதப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிவாசலிலிருந்த மக்கள் விரட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வாகனங்கள் சிலவும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. (இ-7)

# அம்பாறை அசம்பாவிதத்தை வன்மையாக கண்டிக்கிறோம்

## முஸ்லிம் கவுன்ஸில் அறிக்கை



(அம்பாறை)

அம்பாறை நகர் அசம்பாவிதத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் மிக வன்மையாகக் கண்டிப்பதாகவும், நிலைமையை சுமுகமாக்க தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவாக முன்னெடுக்க வேண்டும் எனவும் அவ் அமைப்பின் தலைவர் என்.எம். அமீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று அதிகாலை அம்பாறை நகரில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அம்பாறையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சம்பவம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

நாட்டிலுள்ள இனங்களுக்கிடையிலான நல்லுறவைச் சீர்குலைக்கும் ஒரு அசம்பாவிதமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களை ஆத்திரமூட்டச் செய்யும் இதுபோன்ற நடவடிக்கைகளின் போது முஸ்லிம்கள் மிகவும் விவேகத்துடனும், பொறுமையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என வினயமாக கேட்டுக் கொள்கின்றோம். அப்பிரதேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்த தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசியல் தலைமைகள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளன. மக்கள் அமைதியாகவும் நிதானத்துடனும் நடந்துகொள்ளுமாறும், நாட்டில் இதற்கு முன்னர் ஏற்பட்ட சம்பவங்களை அனுபவங்களாக கொள்ளுமாறும் நாம் முஸ்லிம்களை கேட்டுக் கொள்கின்றோம் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம்.அமீன் மேலும் தெரிவித்தார்.

அம்பாறை நகரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கைகலப்பில் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றும், கடைகள் சிலவும் தாக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் உணவகம் ஒன்றுக்கு உணவருந்த வருகைதந்த பெரும்பான்மை இளைஞர்கள் சிலர் உணவக உரிமையாளருடன் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து உணவகத்துக்கு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பின்னர் தொலைபேசி அழைப்பின் மூலம் இரு வாகனங்களுக்கு வெளிப் பிரதேசத்திலிருந்து ஆட்களை வரவழைத்தே இந்த தாக்குதலை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த ஹோட்டல் தவிர்ந்த மற்றொரு வர்த்தக நிலையத்திற்கும் தீ வைத்துவிட்டு, பள்ளிவாசலுக்கும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவத்தில் பள்ளிவாசலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நான் குற்றம் செய்யவில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

ஒரு கருதுகோளின் அடிப்படையிலேயே தனக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்த, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தான் எந்தவொரு குற்றத்தையும் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தனக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு நேற்று முன்தினம் வருகைதந்திருந்த அவர், நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துரைக்கையில், "இந்த வழக்குத் தொடர்ந்து மூன்று வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. எனக்கெதிரான வழக்கு தேசிய சொத்துக்களைக் கொள்ளையிட்டமை, கொள்ளைச் சம்பவங்கள் அல்லது ஊழல் மோசடிக்கு எதிரான வழக்கு அல்ல, இது அரசியல் வழக்காகும்" என்றார்.

"வழக்கின் பிரதிவாதியைத் தொடர்ந்தும் பிரதிவாதியாக வைத்திருக்க முடியாதென நீதிபதி அறிவுறுத்தியுள்ளார். ஆகையால், பிரதான சாட்சியாளர்கள் இருவரும் அடுத்த வழக்குத் தவணைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# மனசுக்குள் எச்சரிக்கை

சில காட்சிகளைக் கற்பனைக் கண் முன்னே கொண்டு வாருங்கள்.

பக்கத்து வீட்டில் தொலைக்காட்சியை ஓ... என்று கத்த விடுகிறார்கள், கணவன் வீடு திரும்பும் போது வீடு பூட்டிக் கிடக்கிறது, பக்கத்து வீட்டுப் பையன் கிரிக்கெட் பந்தால் ''மடேர் மடேர்'' என்று நம் வீட்டு ஜன்னல் கதவைப் பதம் பார்க்கிறான்.

இப்படி நமக்குப் பிடிக்காத ஒரு செயல் நம் வட்டத்திற்குள்ளேயே நடக்கிறது என்றால் அதன் மூலம் நமக்குக் கோபம் வருகிறது.

பிறகு மெல்ல மனம் தணிந்து அந்தக் கோபத்தை எப்படியேனும் அடக்கிக் கொண்டு விடுகிறோம். ஆனால் மறுபடி அதே தவறு நடக்கும் போது பெரும்பாலும் வெறுக்கிறோம். அதோடு நிற்காமல் சொல்லாமல் செயலால் மற்றவர்களைக் காயப்படுத்துகிறோம்.

சரி, அதன்மூலம் அந்தச் செயற்பாடுகள் அடியோடு நின்று விடுகின்றனவா? என்றால் இல்லை. தொடர்கின்றன. மாறாக, தாங்கள் தாக்கப்பட்ட வித்தில் இன்னும் அச் செயல் வெரிதாக நடைபெறுகின்றன. அல்லது வேண்டுமென்றே செய்யப்படுகின்றன.

முதல் முறை இதுபோன்ற சிறுசிறு தவறுக்ள் நிகழும் போது அவற்றை நம் மனப்பக்குவத்தால் பொறுத்துக் கொண்டுவிட வேண்டும்.

இரண்டாவது முறையும் நிகழ்ந்தது என்றால் இப்படி நடப்பது இதுவே கடைசித் தடவையாக இருக்கட்டும். ஏற்கனவே கவனித்தேன். அப்போது பொறுத்துக் கொண்டு விட்டேன். இனிப் பொறுமை இருக்குமா என்பது சந்தேகம்தான் என்பது போன்று பக்குவமாகச் சொல்லி விடலாம்.

இப்படிச் சொல்வதில் சில நன்மைகள் இருக்கின்றன. நாமும் பாதிக்கப்படாமல் மற்றவரையும் காயப்படுத்தாமல் தப்பித்துவிட முடியும்.

அப்படியின்றி நமக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்த்தாமலே எடுத்த எடுப்பில் கோபித்துக் கொண்டால் அந்தக் கோபத்தில் நியாயம் இருக்க முடியாது. அக்கோபத்திற்கு மதிப்பும் இராது. மாறாக ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் நேர்மாறான விளைவுகளே நிகழும்.

தண்ணீரில் மீன் அழுதால் கண்ணீரை யார் அறிவார் என்று ஒரு கவிஞர் கேட்டதைப் போல் மனசுக்குள்ளே எச்சரிக்கை விடுத்தால் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்?

**லேனா தமிழ்வாணன்**

# போதையற்ற வாழ்வு பொன்னானது; மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி


(படங்கள்:- மகாலிங்கம்)





(கரணவாய்)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் போதைப் பொருளுக்கு எதிரானவிழிப்புணர்வுப்பேரணி நேற்றுக் காலை மேற் கொள்ளப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் ஆரம்பமான பேரணி முதலாம் கட்டைச் சந்தியூடாக பிரதான வீதிவழியாகச் சென்று கொண்டிருந்த போது பருத்தித் துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவர்களும் இப் பேரணியில் கலந்து கொண்டு பருத்தித்துறை நகர்வரை வீதியின் இருமருங்காகவும் பேரணியாகச் சென்றனர்.

போதையால்பாதைமாறாதே, போதையற்ற வாழ்வு பொன்னானது, போதை உண்மை மறந்து உயிர்குடிக்கும் என்ற கோசங்களை எழுப்பிய மாணவிகள் முன்னே செல்ல தன்னிலை மறக்கத் தானே வழி தேடும் சாபம் போதை, இளையோரே! விழிப்படை போதையை விலக்கிடுக, மதுவுக்கு அடிமையானால் மானத்தை இழப்போம், போதைநோயை அழிப்போம், போதையின் பிடியில் சிக்கின் சிதையின் மேல் உன் வாழ்வு போன்ற பதாதைகளை தாங்கியவாறு பேரணியில் ஈடுபட்டனர்.

பேரணியின்இடையேபோதைக்கு அடிமையானவர்களின் குடும்ப நிலையினை வெளிக்கொணரும் நாடகமும் இடம் பெற்றது. பேரணிக்கானபோக்கு வ ரத்து ஒழுங்கை பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார்மேற் கொண்டிருந்தனர். (இ-60)

# காணிகளின் விபரம் திரட்டல்
## பிரதேச செயலகத்தில் பதியுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜே/233, கேகேஎஸ் மேற்கு ஜே/234, கே.கே.எஸ் மத்தி ஜே/235, கே.கே.எஸ் தெற்கு ஜே/236, வீமன்காமம் வடக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் தற்போது காங்கேசன்துறை பொலிஸாரின் பாவனையில் உள்ள வீடு மற்றும் காணி உரிமை யாளர்கள் தமது தேசிய அடை யாள அட்டை, காணி உறுதி, தத்துவ உரிமைப்பத்திரம் ஆகிய ஆவணங்களுடன் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து தமது விபரங்களை 09.03.2018ஆம் திகதிக்கு முன்னராக பதியுமாறு வலி. வடக்கு பிரதேச செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.(இ

# பயிற்சியாளர்கள் பதியவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகினால் நடத்தப்படும் பின்வரும் பயிற்சி நெறிகள் மார்ச் மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதனால் ஆர்வமுள்ள பயிற்சியாளர்கள் பின் வரும் பாடசாலைகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

* யா/இராமநாதன் கல்லூரி- முக ஒப்பனையும் தலை யலங்காரமும்

* யா/தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை- ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும்

2. போதனாசிரியருக்கான வெற்றிடம்-மேற்படி பயிற்சி நெறிக்கான போதனாசிரியர் பதவி நெறிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண் ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் வலிகாம வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபி விருத்திப் பிரிவில் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (இ

# ரூ.30,000 இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரி கைதானார்

(கொழும்பு)

முப்பதாயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்ற பொலிஸ் அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம் வென்னப்புவ பகுதிக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரே இவ்வாறு இலஞ்சம் பெற்றுக் கொண்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# மாசி மகா மஹோற்சவம்

மாதகல் சாடல் விளாத்தி ஸ்ரீ சாந்தநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர சுவாமி தேவஸ்தான மாசி மகா மஹோற்சவ பெருவிழா கடந்த 20 ஆம் திகதி முதல் இடம் பெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை சமுத்திரத்தீர்த்தோற்சவம் நடைபெற்று மாலை துவஜா ரோகணத்துடன் மகா மஹோற்சவம் நிறைவுறும். (இ

# கிராம அபிவிருத்திக்கு ஒற்றுமை மிகஅவசியம்
## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(கரணவாய்)


எந்த அபிவிருத்தியிலும் மிக முக்கியமாகச் செயற்படுபவர்கள் கிராமத்தவர்களே. எங்கு ஒரு கிராமம் ஒற்றுமையாக இருக்கின்றதோ அங்கு பல அபிவிருத்தி களைக் காணமுடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

மணற்காடு றோ.க. த.க. பாடசாலையின் இல்ல மெய் வல்லுநர் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் சோ. வாகீசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்

பல்வேறு விதமான பௌதீக வளங்கள் குறைவான நிலையிலும் மிகச் சிறப்பாக இவ் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. மணல் தரையான விளையாட்டு மைதானத்தில் விளையாடுவது என்பது கடினமான பணி. இருந்தும் அவர்கள் சிறப்பாக விளையாடுகிறார்கள். .

எந்த அபிவிருத்தியிலும் மிகமுக்கியமாகச் செயற்படுவது கிராமத்தவர்களே. எந்த கிராமம் ஒற்றுமையாக உள்ளதோ அங்கே பல அபிவிருத்திகளை காணமுடியும். கிராம அங்கத்தவர்களிடையே போட்டி, ஒற்றுமையின்மை காணப்படின் அக் கிராமம் முன்னேறாது.

அபிவிருத்திக்கு மிக முக்கியம் ஒற்றுமையே. பாடசாலை வளர்ச்சியிலும் சரி கிராம வளர்ச்சியிலும் சரி ஒற்றுமையும் நீங்கள் காட்டும் ஒத்துழைப்புமே மிக முக்கியம் என மேலும் தெரிவித்தார். (இ-60)


கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களிலுமுள்ள கிராம மகளிர் அமைப்புக்களுக்கு தையல் இயந்திரங்கள் யாழ்.பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன.இதேவேளை மனைப் பொருளியல் டிப்ளோமா கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். (படங்கள்:-மகாலிங்கம்)



வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றபோது... (படங்கள்:- பொற்பதி செய்தியாளர்)

# வேலன் சுவாமிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் அமைந்துள்ள கடையிற் சுவாமிகளின் சமாதிச் சிவாலயத்திற்கு நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அமெரிக்க ஹாவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் வருகை தரவுள்ளார். (இ

# தரம் 5 மாணவர்களுக்கான கருத்தரங்கு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியால் ஒழுங்குபடுத்தப்பட்ட தரம்5 மாணவர்களுக்கான வினாவிடைத் தொகுப்பு வழங்கலும் கருத்தரங்கும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். சாவகச்சேரிநகர சபை மண்டபத்திலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் இடம் பெறும். (இ

# இனவாதத் தாக்குதலை வேடிக்கை பார்த்த பொலிஸார்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரணில் உடன் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை







(அம்பாறை)

அம்பாறையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட இனவாதத் தாக்குதல் சம்பவத்தின் போது பொலிஸார் பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளனர். நகரில் பதற்ற நிலை ஆரம்பிக்கும் நேரம் வரை ரோந்து கடமையில் இருந்த பொலிஸார் கலவரக்காரர்கள் பேருந்துகளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் அணி வகுத்து வந்து வர்த்தக நிலையங்களைத் தாக்கத் தொடங்கியதும் தலைமறைவாகியுள்ளனர்.

அத்துடன் பள்ளிவாசல் தாக்குதலுக்குள்ளான போது அவ்விடத்திலிருந்து பார்வைக்குத் தென்படும் தூரத்தில் பொலிஸ் நிலையம் அமைந்திருந்த போதும் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர தடுக்க முற்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்து அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர இராணுவக் கட்டளை அதிகாரியை தொடர்பு கொண்டு இராணுவத்தினரையும் களத்தில் இறக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அத்துடன் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் கண்டிப்பான உத்தரவு விடுத்துள்ளார். அதன்பின்னரே பொலிஸார் களத்தில் இறங்கி பதற்றத்தைத் தணிக்க முயற்சித்துள்ளனர். அதற்குள் கலவரக்காரர்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களையும், வாகனங்களையும் தாக்கி தீயிட்டும், சேதப்படுத்தியும் இருந்தனர். அத்துடன் பள்ளிவாசலும் சேதப்படுத்தப்பட்டு அங்கு தங்கியிருந்தோரும் மிலேச்சத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர். சட்டம் ஒழுங்கு அமைச்சை தன் கைவசம் வைத்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் கடும் நடவடிக்கை எடுப்பதுடன், பாராமுகமாக இருந்த பொலிஸார் மீதும் உரிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# உளமுகம் சஞ்சிகை வெளியீடு





(கிளிநொச்சி)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன வரலாற்றில் "உளமுகம்" சஞ்சிகை வெளியீடானது குறிப்பிட்டுக் கூறக்கூடிய பெறுமதி வாய்ந்த நிகழ்வாகும் என தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன கிளிநொச்சி பிராந்திய நிலைய கற்கைநெறி இணைப்பாளர் த.தர்ஷன் தெரிவித்தார்.

உளவளத்துணை டிப்ளோமா 2016 - 2018 ஆம் கல்வியாண்டு பயிலுநர்கள் நடத்திய "உளமுகம்" உளவளத்துணை சஞ்சிகை வெளியீடும் பிரிவுபசார விழாவும் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன கிளிநொச்சி பிராந்தியத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையினை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மிகக் குறுகிய காலத்தில் தொழில்வாண்மையாளர்கள் மற்றும் உளவளத்துணை மாணவர்களிடமிருந்து கட்டுரைகளைப் பெற்று, தொகுத்து வடிவமைப்பினை மேற்கொண்டு இந்நூலாக்கத்திற்கு உழைத்த நூலாசிரியர் அ.பெஸ்ரியன் அவரோடிணைந்து உதவிய செல்வி அ.அஜந்தா மற்றும் சி.சிவயோகன் ஆகியோருக்கும் எனது மனமுவந்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேவேளை இந்நூலின் ஆசிரியர் இச்சஞ்சிகைக்கு "மனமே" என பெயர் வைக்கலாம் என என்னிடம் தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் உள்ள கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்தபோது "யாழ்முகம்" எனும் நிகழ்சியை நடத்தியிருந்தேன். அந்நிகழ்ச்சி ஈழ மக்களின் பிரச்சினைகளை தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதாக அமைந்திருந்தது.

அதனால் அங்கு பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது போலவே உளமுகம் எனும் பெயரானது ஒரு மனிதனுக்குள் காணப்படுகின்ற பல முகங்களை வெளிப்படுத்தும் ஊடகமாக இச்சஞ்சிகை அமையும் என நம்புகிறேன்.

இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள மாதிரி ஒழுக்க நெறிக்கோவை எவ்வாறு தனித்துவமாக அமையப் பெறவேண்டுமென நூலாசிரியருக்கு நான் அறியப் படுத்தியிருந்தேன்.

நேரான விளைவுகளைப் பெற வேண்டி சில சமயங்களில் மறை யான தாக்கத்தைச் செலுத்து வது தவிக்க முடியாததாகும் போலவே "உளமுகம்" சஞ்சிகையின் உருவாக்கமும் அப்படியொரு சந்தர்ப்பத்தில் தான் அமையப் பெற்றது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நூலாசிரியர் அ.பெஸ்ரியன், கலாநிதி க.கஜவிந்தனால் கௌரவிக்கப்பட்டார். (இ-315)

# உலர் வலயத்திலுள்ள 2 ஆயிரத்து 400 குளங்களின் புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்த ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

உலர் வலயத்தில் உள்ள 2400 சிறிய குளங்களின் புனரமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கு தேவையான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதுடன், வரட்சியான கால நிலையில் விவசாய சமூகத்திற்கு கஷ்டங்களின்றி தமது வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இக்குளங்களின் புனரமைப்புப் பணிகளை விரைவாக அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் தமன்கடுவை பிரதேச செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பொலநறுவை மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். "எழுச்சி பெறும் பொலநறுவை" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் இவ்வருடத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதேநேரம் சிறுநீரக வைத்தியசாலை, பொருளாதார மத்திய நிலையம் மற்றும் மும்மொழி பாடசாலை ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இம்மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்ப்பாசனம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் ஏற்பாட்டின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கின்றபோது குறித்த பிரதேசங்களில் உள்ள மக்களின் அபிவிருத்தி தேவைகளை இனங்கண்டு மக்களின் பணம் விரயமாகாத வகையில் அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதார வழிகளை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய நியமங்களுக்கேற்ப மக்களின் தேவைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும் மாவட்டத்தில் உள்ள விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் எதிர்நோக்கும் நீர்ப் பிரச்சினை குறித்தும் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த ஜனாதிபதி, நீர்த் தேக்கங்கள் மற்றும் குளங்களிலுள்ள நீர்மட்டம் குறித்து விவசாய அமைப்புகளின் ஊடாக விவசாய சமூகத்திற்கு தொடர்ச்சியாக அறிவூட்டி அதற்கேற்ப தமது விவசாயத் திட்டங்களை தயாரிப்பது குறித்த அறிவுறுத்தல்களை வழங்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். (இ-7)

# பொல்லால் அடித்து ஒருவர் படுகொலை

(கொழும்பு)

பெல்மடுள்ள, குட்டாபிட்டிய பகுதியில் நேற்றுக் காலை பொல்லால் அடித்து ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

காணிப் பிரச்சினை தொடர்பில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உச்சமடைய ஒருவர் மற்றவரை பொல்லால் அடித்துக் கொலை செய்து பின்னர் அப்பகுதியை விட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெல்மடுள்ள பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து கொலை செய்யப்பட்டவரின் சடலம் கிரிந்தி ஓயாவில் மீட்கப்பட்டுள்ளது.

பெல்மடுள்ள, குட்டாபிட்டிய பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் தொடர்பில் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அவரை கைது செய்ய பெல்மடுள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## தேசிய நிர்மாண விருது விழா ஜனாதிபதியின் தலைமையில்





(கொழும்பு)

தேசிய நிர்மாண கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கான சிறந்த பங்களிப்புகளை பாராட்டும் வகையில் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் 'தேசிய நிர்மாண விருது விழா' ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிர்மாணத் துறையில் சிறந்து விளங்கிய 8 பேருக்கான விசேட விருதுகளை ஜனாதிபதி வழங்கினார்.

தேசிய ஒப்பந்தக்காரர்களினால் வெளிநாட்டு கருத்திட்ட நிர்மாணப் பணிகளை ஊக்குவித்து, பாராட்டுவதற்காக இம்முறை சேர்த்துக்கொள்ளப்பட்ட 3 புதிய விருதுகளையும் ஜனாதிபதி வழங்கினார்.

நிர்மாணத்துறை மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான சுற்றாடல் வழிகாட்டல் சஞ்சிகை வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.எம். அபேரத்ன, நிர்மாணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.ஆர்.ஜெயவர்த்தன, நிர்மாணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கட்டடக் கலைஞர் எச்.கே. பாலசந்திரன் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# அட்மிரல் கரன்னகொடவை கைது செய்ய நடவடிக்கை



(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக் கப்பட்டமை தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டே நீதவான் நீதிமன்றில் நடந்து வருகிறது.

இந்தக் கடத்தல்கள் தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட அறிந்திருந்தார் என்று, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதவானிடம் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, அட்மிரல் வசந்த கரன்னகொட தொடர்பான முடிவை எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி தமக்கு அறியத்தர வேண்டும் என்று கோட்டே நீதவான், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே அட்மிரல் வசந்த கரன்னகொடவைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)



கேவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது...
(படங்கள்:- பொற்பதி செய்தியாளர்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1342

Search for people, places and things | Nagendram Home

### அம்மு

இன்னிக்கு யார் என் பேச்சைக் கேட்டு ஒழுங்கா இருக்காங்களோ, அவங்களுக்கு ஒரு பரிசு தருவேன்!



போம்மா... இந்த விளையாட்டுக்கு நான் வரலை... எப்பவும் அப்பாதான் ஜெயிப்பாரு...!

### ராகுலன்

தம்பி இந்த டூத் பேஸ்ட்லதான் உப்பு இருக்கு... அதனால இதை வாங்கிக்கோ...



வேண்டாம்னே உப்பு போட்டு பல்லு விளக்கினா ரோசம் வந்திடும். ரோசம் உள்ளவன் எவனாச்சும் உங்க கடைல பொருள் வாங்குவானா?

### அன்பு

அம்மி மிதிச்சு அருந்ததி பார்த்து கல்யாணம் பண்ணா Arrange Marriage



மம்மி மிதிச்சு டாடி உதைச்சு கல்யாணம் பண்ணா Love Marriage

### அகிலன்

உன்னைக் காதலிக்கும் பெண்ணை நீ திரும்பிக்கூட பார்க்காதே



ஏன்னா உன்னையெல்லாம் காதலிக்கிறது எப்படியும் மொக்க பிகராதான் இருக்கும்

### ஆரூரன்

ஸ்கூல் டூர் போறோமே நீ வரலைன்னு சொல்லிட்டியாமே ... ஏன்?



இல்ல சேர் டூர் போயிட்டு வந்த பிறகு அதைப்பற்றி இங்கிலீஸ்ல கட்டுரை எழுதச் சொல்லுவீங்களே... அதான்...

### ஆதவன்

நண்பன் அடிபட்டு கைல கட்டோட போட்டோ போட்டுருக்கான்... அதுக்கு கீழ கமெண்ட்ல "பெறுக கிணறு சீக்கிரம்"னு எழுதியிருந்தது!



என்னடானா... GET WELL SOON இற்கு மொழிபெயர்ப்பாம்! அடேய் எங்கடா இருந்து வர்றீங்க...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோத்தாவை பிரதமராக்கி மீண்டும் ஜனாதிபதியாக மைத்திரி புதிய திட்டம்!

## ஜே.வி.பி.பிமல் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து, தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியொன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.


தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றவுடன் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தார்.

ஆனால் தற்போது மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கவில்லை என்கின்றார். அதுமாத்திரமின்றி, பதவிக்காலம் குறித்தும் வினவி வருகின்றார். இவற்றிலிருந்து அவரது ஜனாதிபதி பதவிக்கான ஆசை வெளியாகியுள்ளது.


ஆனால், தற்போது மக்களின் ஆதரவு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உள்ளமை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் வெளியாகியுள்ளது.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவிடமுள்ள இந்த ஆதரவு ஜனாதிபதி மைத்திரிக்கு தேவையாகவுள்ளது. ஏனெனில் நல்லாட்சியின் வாக்குகள் அவருக்கு இனி கிடைக்கப்போவதில்லை.

இதனால், மகிந்த தவிர்ந்த அவரது குடும்பத்தின் பிரபலத்தை தன்னுடன் இணைத்து ராஜபக்ஷவின் வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக கோத்தபாயவை இணைத்துக் கொண்டு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதே மைத்திரியின் இலக்கு" எனத் தெரிவித்தார். (இ-7)




## வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து இனந்தெரியாதோரால் தீக்கிரை



(கொழும்பு)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதியின் பட்டிமேடு சந்தியில் பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று நேற்று அதிகாலை 2.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பேருந்து வீதியின் அருகே நிறுத்திவைக்கப்பட்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் தீக்கிரையாக்கப்பட்ட பேருந்து முள்ளிப்பொத்தானை 97 ஆம் கட்டையை சேர்ந்த சமிந்த என்பவருக்கு சொந்தமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# திருப்தி


## கல்வியமைச்சு மாற்றப்படாமைக்கு இது தான் காரணமாம் - இராதா

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சுக்கள் பல மாற்றப்பட்டபோதும் கல்வி அமைச்சு மாற்றப்படாததற்கு காரணம் அதன் திருப்திகரமான செயற்பாடுகளே ஆகும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரிகள் 71 பேருக்கு இரண்டாம் கட்டமாக நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்வி அமைச்சில் அமைச்சர் அகில்விராஜ் காரியவசம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டில் கல்வித்துறை அபிவிருத்தியானது அந்நாட்டின் ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் இன்றியமையாததாகும். அதனை கருத்திற்கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்தில் கல்வி அமைச்சு கல்வித் துறையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளது.



அந்த வகையில் ஆசிரியர் நியமனங்கள், அதிகாரிகளின் நியமனங்கள், பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி செயற்றிட்டங்கள், மாணவர்களுக்கான காப்பீடு, பாடசாலைகளின் மின்சாரம், மலசலகூடம், குடிநீர் திட்ட அபிவிருத்திகள், அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டம், அத்துடன் மலையகத்தில் 25 கணித, விஞ்ஞான பாடசாலைகளின் அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை உட்பட தேசிய கல்வியியற் கல்லூரிகளின் அபிவிருத்திகள் என கல்விசார் பல்வேறு விடயங்களில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த செயற்பாடுகள் காரணமாகவே அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சுக்கள் பல மாற்றப்பட்ட போதும், கல்வி அமைச்சு மாற்றப்படவில்லை. இதன் திருப்திகரமான செயற்பாடுகள் குறித்து கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், பிரதமர் உட்பட ஜனாதிபதியும் நன்கு அறிந்து வைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஊடகவியலாளர் மீது மர்மநபர்கள் தாக்குதல்

(கொழும்பு)

சமூக விரோதிகள் பற்றிய செய்திகளை வெளியிட்டமைக்காக ஊடகவியலாளர் ஒருவரையும் அவரது குடும்பத்தினரையும் குண்டர்கள் தாக்கி காயப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் நேரத்தில் இடம் பெற்றுள்ளது.

ஹோமாகம, மீகொட பிரதேசத்தில் நடைபெறும் சமூக விரோதச் செயற்பாடுகள் குறித்து அங்குள்ள பிரதேச ஊடகவியலாளர் ஒருவர் தினந்தோறும் செய்திகளை எழுதி வந்துள்ளார்.

இதன் காரணமாக அப்பிரதேச சமூக விரோதிகளுக்கு சுதந்திரமாக செயற்பட முடியாமற்போன நிலையில் அவர்கள் குறித்த ஊடகவியலாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஊடகவியலாளரின் மனைவி, குழந்தை மற்றும் உறவினர் ஒருவர் ஆகியோர் காயமடைந்துள்ளனர். பத்துப் பேர் கொண்ட குண்டர்கள் அவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதல் மேற்கொண்ட குண்டர்களில் படுகொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர் மற்றும் போதைப் பொருள் வர்த்தகர்கள் ஆகியோர் உள்ளடங்கியிருந்ததாக தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-7)

### பொருளாதார மைய நிர்வாகத்தில் தலையீடு

## அமைச்சர் ஹரிசன் மீது வர்த்தகர்கள் குற்றச்சாட்டு



(கொழும்பு)

கிராமியப் பொருளாதார அமைச்சர் ஹரிசனின் செயற்பாடுகளுக்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவிப்பதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை பொருளாதார மையத்தின் வர்த்தகர் சங்கம் நேற்று முன்தினம் மாலை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்ட விடயத்தை தெரிவித்துள்ளனர்.

பொருளாதார மையத்தின் நிர்வாகத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி நிர்வாகத்தையும் அதன் வருமானத்தையும் கைப்பற்றிக் கொள்ள அமைச்சர் ஹரிசன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என குற்றம் சாட்டியுள்ளனர்.

அதற்கு வசதியாக நிர்வாகத்திற்கு அரசியல் சிபாரிசின் அடிப்படையில் அண்மையில் சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கு முன்னர் நிதியமைச்சின் கண்காணிப்பில் ஒரு சுயாதீன சபையே பொருளாதார மத்திய நிலையத்தை நிர்வகித்தது.

தற்போதைக்கு இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி பொருளாதார மத்திய நிலையத்தின் வசம் இருக்கும் மில்லியன்களுக்கான பணத்தை கையாடல் செய்ய அமைச்சர் ஹரிசன் முயற்சிக்கின்றார் என்றும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனினும் குறித்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அமைச்சர் ஹரிசன், பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்வாகத்தை சீர்படுத்தி அதனை சிறப்பான முறையில் முன்கொண்டு செல்வதே தமது நோக்கம் என்று வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# திடீரென் தீப்பிடித்து எரிந்த பேருந்து!

## பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றம்



(கொழும்பு)

மாத்தளையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் கண்டி தெற்கு டிப்போவுக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியில் திடீரென தீப்பற்றியதால் பலத்த சேதத்திற்குள்ளானது.

மாத்தளையில் இருந்து நேற்று அதிகாலை 4.30 மணிக்கு கண்டியை நோக்கிப் பயணித்த மேற்படி பேருந்து அலவத்துகொடை பலகடுவ பிரதேசத்தில் வைத்து அதிகாலை 5 மணியளவில் தீப்பற்றியதாக அதன் சாரதி மற்றும் நடத்துநர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

பேருந்து தீப்பற்றும் போது அதிலிருந்த பயணிகள் பாதுகாப்பான முறையில் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக அலவத்துகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பேருந்து கவிழ்ந்து விபத்து 37பேர் படுகாயம்



(கொழும்பு)

வலப்பனை நில்தண்டாஹின்னவிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு தெறிபாஹா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று நில்தண்டாஹின்ன தெறிபாஹா பிரதான வீதியில் அபன் எல்லப் பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 37 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்து சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ் விபத்தில் காயமடைந்த 37 பேரில் 13 பேர் நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

# போராட்டங்கள் நடத்தப்பட்டமையே தேர்தல் தோல்விக்கான காரணமாம்

## அமைச்சர் சம்பிக்க கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அதிகளவில் போராட்டங்கள் நடத்தப்பட்டமை தேர்தல் தோல்விக்கான காரணம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதிலும் 1414 போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டங்களில் 341 போராட்டங்கள் மாலம்பே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரானவை.


மாலம்பே தனியார் மருத்துவக் கல்லூரி பிரச்சினைக்கு அரசாங்கம் காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கத் தவறியுள்ளது.

இந்தப் போராட்டங்களினால் மனித மணித்தியாலங்கள், மனித நாட்கள் விரயமாகியுள்ளன.

இவ்வாறான போராட்டங்களுக்கு கடுமையான பதில்களை அளிப்பதனால் பலனில்லை.

சைட்டத்தை இரத்துச் செய்து தீர்வு வழங்கப்பட வேண்டும், அதில் கற்ற மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரைக் கம்பத்தில் ஐ.நா.கொடி



(கொழும்பு)

உடல்நலக் குறைவால் திடீரென மரணமான இலங்கைக்கான, ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியின் இறுதிக் கிரியை எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மருத்துவ விடுப்பில் இருந்து சிகிச்சை பெற்று வந்த உனா மக்கோலி கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கொழும்பில் உள்ள ஐ.நா. பணியகத்தில் ஐ.நா. கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. (இ-7)

# அம்பாறையில் கலவரம்! பிரதமருக்கு இராஜாங்க அமைச்சர் அவசர கடிதம்

(கொழும்பு)

அம்பாறை நகரிலுள்ள ஜும்ஆ பள்ளிவாசல், முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார நிலையங்கள் மற்றும் வாகனங்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்,

"சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள இந்த அரசு சிறுபான்மை மக்களின் உரிமை - பாதுகாப்பு விடயத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

நல்லாட்சி அரசிலும் இவ்வாறாக முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்ந்து செல்வதானது முஸ்லிம்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இதற்கு நிரந்தர தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்ள முஸ்லிம் தலைமைகள் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுசேர்ந்து அரசுக்கு கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

அம்பாறையில் நடந்துள்ள சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு சம்பவமாகும்.

வெளியூர்களில் இருந்து வந்த கும்பலொன்றினாலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன்போது பொலிஸார் மந்தகதியில் செயற்பட்டதாகவும் பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி நீதியான விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், குற்றவாளிகளுக்கு எதிராக விரைவாக சட்ட நடவடிக்கை எடுத்து அங்கு முஸ்லிம்கள் வாழ்வதற்கான- வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழலை உறுதி செய்ய வேண்டும் என சட்டம் ஒழுங்கு அமைச்சரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எமது கண்டனத்தையும் தெரிவித்துள்ளோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 70 | 70 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 65 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 60 | 70 | 100 | 50 |
| தக்காளி | 30 | 30 | 20 | 40 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 50 | 40 | 35 |
| கோவா | 50 | 40 | 40 | 60 | 60 | 40 |
| கரட் | 80 | 100 | 100 | 120 | 160 | 70 |
| பூசணி | 80 | 40 | 40 | 50 | 60 | 40 |
| புடோல் | 60 | 70 | 35 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 120 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 140 | 110 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 55 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 160 | 100 | 80 | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 150 | 160 | 140 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 40 | 50 | 40 | 60 | 60 | 50 |
| கறிமிளகாய் | 150 | 100 | 70 | 100 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 600 | 800 | 500 |
| போஞ்சி | 140 | 140 | 80 | 120 | 200 | 80 |
| சத்தரிப்புள்ள | 60 | 60 | 60 | — | 80 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 80 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 35-80 | 65 | 75 | 95 |
| இராசவள்ளி | 180 | 160 | 140 | 160 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 50 | 80 | — | 100 | 120 | 90 |
| முள்ளங்கி | 20 | 80 | 30 | 60 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | 60 | — | — | 80 | 80 |

# துறவிகளின் வரவால் துலங்கட்டும் சிவபூமி

ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள்

தந்தையாருடன் பால்ய வயதிலிருந்தே மடத்துடன் தொடர்பு கொண்டிருந்த இவர் இளைஞனானதும் தானாகவே வேதாந்த மடத்திற்கு வந்து சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெற்றுச் செல்லும் வழ்க்கமுடையவர். இராமலிங்க சுவாமிகளால் உருத்திராக்கம் அணிவிக்கப் பெற்று ஆன்மீக வழிக்கு அழைத்துவரப் பெற்றவர். நமசிவாயம் சுவாமிக ளின் அநுக்கத் தொண் டனாக இருந்தவர். புத்தூர் மழ வராயர் குடும்பத்தில் தோன்றிய இவர் துறவு நெறியை மேற்கொண்டு தனது ஆன்ம ஈடேற்றத்துக்காக உழைத்த துடன் இறைவனை அடைய வேண்டுமென்ற பேரவா கொண்டோர்க்கு வழிகாட்டியாகவும் இருந்து சேவை செய்த ஒரு மகான். மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் இம் மடத்தை. அதன் செயற்பாடுகளை செவ்வனே நடத்திவந்த சீர்மையாளன். பிரமச்சாரியாக வாழ்ந்து தூய்மையான துறவற நெறியில் நின்று எப்போதும் புன்னகையோடு மடசம்பிரதாயங்களை இறுக்கமாகப் பேணிவந்தார்



ஸ்ரீமத் வேதவித்யாசாகரர் சுவாமிகள்

காலங்காலமாக குருபீடத்தின் பாரம்பரியம் சிதைந்து விடாமல் இருக்க ஒவ்வொருவரையும் நியமிக்கும் சக்தி சமாதிநிலையில் இருக்கும் மகான்களின் அநுக்கிரகத்தாலே நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் பூர்வ புண்யபலன் காரணமாக பதினைந்து வயதிலேயே சோமஸ்கந்தவேள் சுவாமிகளிடம் கிடைக்கப் பெற்றவர் தான் வேதவித்யாசாகரர் சுவாமிகள். செந்தூரன் என்ற பாடசாலை மாணவனாக கிடைக்கப்பெற்ற இவர் அன்றிலிருந்து மடத்தின் சகல நடவடிக்கைகளிலும் சோமஸ்கந்தவேள் சுவாமிகளோடு இணைந்து பூசைகள், அநுட்டானங்கள், நிர்வாகங்கள் சகலவற்றிலும் பங்குகொண்டு சுவாமிகளுக்கு உறுதுணையாக செயற்பட்டு வந்தார். சுவாமிமார்களுக்கே உரியதான அந்திம காலத்தை உணரும் பான்மையினால் தன்நிலையாமை பற்றி உணர்ந்த சுவாமிகள் அடியார்கள் முன்னிலையில் தனது உருத்திராட்ச மாலையை அணிவித்து "ஸ்ரீமத் வேதவித்யாசாகரர்" என்னும் தீட்சாநாமமும் வழங்கி மரணசாசன உறுதியும் முடித்துவைத்தார். அன்றிலிருந்து இளந்துறவியாகி பிரமச்சரிய வாழ்வை மேற்கொண்டு குருவின் ஆசியினால் வேதாந்த மடத்தில் பல சமய, சமூக, அறப்பணிகள், யோகாசன வகுப்புக்கள், பஜனைகள், ஞானயக்ஞங்கள், சொற்பொழிவுகள், குருமார்களின் நித்திய பூசைகள், ஆண்டுப் பூசைகள் போன்றவற்றை சிறப்பாக நடத்தி பரிபாலன சபையின் உதவியுடன் வேதாந்த மடத்தைச் செவ்வனே நடத்திவருகின்றார்.

ஆதிகுருவான கடையிற் சுவாமிகளது சீடர்பரம்பரை இன்னவாறாக வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டுவர இன்னொரு சீடர் பரம்பரை வழிவந்தது தான் இந்த அமெரிக்க ஹவாய் ஆதீனம். அது சித்தாந்த பீடமாக வளர்ந்தது.

யாழ்ப்பாணத்து ஆதிகுருவாய் மிளிர்ந்த கடையிற் சுவாமி வழியில் சீவன் முத்தராக உலாவந்தவர்தான் செல்லப்பா சுவாமி. தேரடியில் இருந்து நடமாடித்திரிந்த சித்தர். பலபேர் புத்திசுவாதீனமில்லாதவர் என்று ஏளனம் செய்ததும் உண்டு. உடலில் உயிர் இருக்கும் போதே முத்தியடைந்தவரைத்தான் சீவன் முத்தர் என்பார்கள் என்பதை அறியாத உலகம். அவரும் ஆனந்த நடம் ஆடுவார் ஓடுவார். நன்மையொடு தீமையில்லை நாடுவதும் ஒன்றுமில்லை சீலமிலை தவமில்லை, கோலமிலை, புலனில்லை, குணமில்லை, குறியில்லை பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணம்மருவிப் பாடலினோடாடலிவை பயில்வர் என்று சிவஞானசித்தியார் சொல்வதுபோலவே இருக்கும் அவர் செயல். இவருக்குச் சீடராக வாய்த்தவர் யோகர்.

யோகர்சுவாமிகள்

செல்லப்பா சுவாமியையே குருவாகக் கொண்டார் யோகர்சுவாமி. கருணையே வடிவான கடவுளின் பெருங் கருணை "தலையளி" எனப்படும் முதற்தரமான கருணையாகும். அது யாதெனில் மனிதரை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவனே மானிடச் சட்டை சாத்தி குருபரனென்றோர் பெயர்கொண்டு மண்மேல் மலரடி வைத்துத் திரிதலாம். சிவபெருமானே செல்லப்ப மூர்த்தமாய் நல்லூர் தேர்முட்டிப் படியிலிருந்து அளித்த அருளாடலை அநுபவித்தவர் யோக சுவாமி. தீட்சையிலே ஒருவகை வாசகதீட்சை. அதுவே யோக சுவாமிக்குக் கிடைத்தது. தன்னைத் தொடர முயற்சித்த யோகருக்கு அவரளித்த வாசகம் "ஆரடா நீ" "தேரடா உள்" தீரடா பற்று" "பாரடா வெளியில்" பாவலரையும், நாவலரையும் பதறச்செய்யும் இப்பரிபாசையின் பொருள் சீடராகிய யோகருக்குத் தெட்டத் தெளிவாய் விளங்கியது. அதுமட்டுமல்ல தன்திவ்விய பார்வையாலே சென்ம மலமெல்லாம் தீர்த்துவிட்டார். நல்லூர் வீதியிலே தன்கரத்தாற் தொட்டு வெட்ட வெளியில் விட்டார் செல்லப்பர். சதுர்வித உபாயத்தாலும் சீடரான யோகரை தானாகச்செய்தார். சீடரும் ஆசானருளால் ஆசானாயினார். "ஒரு பொல்லாப்புமில்லை", "எப்பவோ முடிந்த காரியம்", "முழுதும் உண்மை", "நாமறியோம்" போன்ற மகாவாக்கியங்களையும், "இருந்துபார்", "ஏதுமொன்றற நில்" என்று நொடிபோன்ற மொழிகளையும் அருளினர். தேரடியிலிருந்து நாற்பது நாள் இரவுபகலாக நிட்டையிலிருந்தார் யோகர் சுவாமிகள். இவ்வாறு ஆசானானாய்ப் பரிணமித்த சிவயோகக் குருமணி கொழும்புத்துறைக் குடிலில் உறைந்தும், அன்பர் இல்லம் தேடிச்சென்றும், யாழ்.நகர வீதியில் காட்சிக்கெளியராய் நடமாடியும், ஞானப்புதல்வர்கள் தங்கியிருக்கும் அப்புத்தளை, தியத்தலாவ போன்ற இடங்களுக்குச் சென்றும் ஞானவிளக்கம் செய்துவந்தனர். செல்லப்பருக்கு யோகர் ஒரே ஒரு சீடர். ஆனால் யோகருக்கோ உலகம் முழுவதும் சீடர்கள். அவர்களில் ஒருவர் இலங்கையின் கடைசித் தேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவின் மகன். இவர் யோகர் சுவாமியைச் சரணடைந்து தீட்சை பெற்று "இராமபோதம்" என்னும் தீட்சாநாமம் பெற்றார். தற்போது இங்கிலாந்தில் இருந்து ஆத்மீகத்தைப் பரப்பிக்கொண்டிருக்கின்றார். மற்றவர் அமெரிக்காவைச் சேர்ந்த சத்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி.

சுப்பிரமுனிய சுவாமி.

ஜனவரி ஐந்து 1927 இல் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் அமெரிக்க ஆங்கிலே யராகப் பிறந்தவர். இவரது இயற்பெயர் றொபேர்ட் ஹான்சன். இவர் "குருதேவா" என பக்தர்களால் அழைக்கப் பெற்றவர். இவருக்கு யோகர் சுவாமிகள் வழங்கியது பரிச தீட்சையாகும். இது சாதாரணமாக குருவானவர் தனது கரங்களால் அல்லது திருவடிகளால் தொட்டு வழங்கும் தீட்சையாகும். ஆனால் யோகர் சுவாமிகளோ சீடனாக்கி தன்னால் சுப்பிரமுனிய சுவாமி என தீட்சா நாமமும் வழங்கிய சீடர் சுப்பிரமுனிய சுவாமிக்கு கொடுத்தது முதுகில் ஓங்கி ஒரு அறை. பின்னர் இந்த ஓசை அமெரிக்காவரை கேட்கும் என்று கூறியே பரிச தீட்சை கொடுத்தார். குருவின் வார்த்தையின் மறை பொருளை, அகப் பொருளை குருவருளால்உணர்ந்து கொண்ட சுப்பிரமுனிய சுவாமி அமெரிக்கா திரும்பி 1970ஆம் ஆண்டு ஹவாய் தீவில் "சைவ சித்தாந்த ஆதீனம்" என்றோர் திருக்கோயிலை அமைத்து தான் ஒரு ஆங்கிலேயராகப் பிறந்தும் சுத்த சைவனாக வாழ்ந்தது மட்டுமன்றி நமது சமயம் தொடர்பாக பல ஆராய்ச்சி நூர்லகளையும் எழுதினார்.

சத்குரு போதிநாத வேலன் சுவாமி

கலிபோர்னியாவில் 1942 ஒக்டோபர் 10 இல் பிறந்த இவர் சத்குரு சுப்பிரமுனிய சுவாமியின் வழித்தோன்றலாக நியமிக்கப் பெற்றவர். இவர் ஆதீனத்தின் தலைவராக இருந்து கொண்டு சைவ ஆகமங்கள், மறைபொருள் வேதங்கள் மற்றும் சைவம் சார்ந்த பல நூல்களினை கணனிமயமாக்கியும் இலவசமாக வழங்கியும் சைவத்திற்குப் பெரும்பணியைச் செய்து வருகிறார். சுப்பிரமுனிய சுவாமிக்கும் உள்ளூர் இரத்தினக்கல் வியாபாரியான அலமித்திரா என்ற பெண்மணிக்கும் கிடைத்த கனவுக் காட்சிகளை அடுத்து ஆறுமுகம் கொண்டதும் அரியவகை பளிங்குருவில் ஆனதுமான ஓர் இலிங்கம் "அர்கன்சா" மாநிலப்பகுதியில் கண்டெடுக்கப் பெற்றது.

சுமார் ஐம்பது மில்லியன் ஆண்டுகள் பழைமையானதாகக் கருதப்பெறும் இந்த இலிங்கம் 1987 இல் ஹவாய் ஆதீனத்திற்குக் கொண்டுவரப் பெற்றது. இவ் இலிங்கம் இயற்கையாகவே இதே வடிவில் உருவாகி சேற்றில் மூழ்கியதாக்க் கருதப்படுகிறது. இச்சுயம்பு லிங்கம் 2018 இறுதிக்குள் சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள் தலைமையில் பிரதிட்டை செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இவரது சமயப் பணிகளில் ஒன்றாக இவர் தலைமையில் உலகின் பலநாடுகளைச் சேர்ந்த அறுபத்தைந்து துறவிகள் இந்த சிவபூமிக்கும், வேதாந்தமட சிவகுருநாத குருபீடத்திற்கும் எழுந்தருள இருக்கின்றார்கள். எங்கள் யாழ்ப்பாண மண் சுபீட்சமடையவும், எங்களின் வாழ்விலும் தாழ்விலும் துணையாக நின்றும் உதவி வரும் ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளால் எமக்கு இவர்களின் தரிசனம் கிடைக்க இருக்கின்றது.

சைவசமயத்திற்கும் . ஆன்மீகத்திற்கும் பெரும் எழுச்சியை ஏற்படுத்த இம் மண்ணுக்கு வருகை தந்திருக்கும் துறவிகள் இன்று 28.02.2018 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு இல. 18, குமாரசாமி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்திற்கு வருகை தர இருக்கிறார்கள். இத்துறவிகளைத் தரிசித்து பிறவிப் பெரும்பயனை அடைவோமாக. (முற்றும்)

தெய்வ தமிழிசைக் கவிஞர்,
**இராசையா குகதாசன்,**
நாயன்மார்கட்டு.

## உணர்வு பூர்வமாக நடந்து கொள்ளுங்கள்

# சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிபர், ஆசிரியர்களுக்கு அறிவுரை

(கொழும்பு)

சிறுவர்கள் விடயத்தில் உணர்வுபூர்வமாக நடந்து கொள்ளுமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆசிரியர்களையும் அதிபர்களையும் கேட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் உடலியல் ரீதியான தண்டனைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை அறிவித்துள்ளது.

சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்துவதனால் அவர்கள் வன்முறை, திருட்டு உட்பட பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்றும் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினராக கண்டி நல்லாயன் கன்னியர் மடம் ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி சகுந்தலா பத்மநாதன், கௌரவ விருந்தினராக நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய பழைய மாணவன் (கடைர்) நடராஜா சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மத்தி கிராம அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சாந்திகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதியநிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக கே.ரி.சிறீ ஸ்கந்தசிங்கம், செயலாளராக கே.ராமஜயம், பொருளாளராக என்.தவராசா ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்கள் 8 பேரும் தெரிவு செய்யப் பட்டனர். (இ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொம்மந்துறை யாழ். கம்பர் மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாட சாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ)



வடமராட்சி கிழக்கு சுவிஸ் ஒன்றியத்தின் அனுசரணையில் நடத்தப்பட்ட இலவச அழகுக் கலை பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலர் எஸ்.கண்ணதாஸன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தாளையடிப் பங்குத் தந்தை அன்ரனிமைக் கலந்து கொண்டார். (படங்கள்:-பொற்பதிச் செய்தியாளர்)

> உலகில் மிகப்பெரிய பாவம் ஒருவன் தன்னை பலவீனன் என்று நினைப்பது.
>
> – சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்களை நாங்களே தாழ்வுபடுத்திக் கொண்டோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் சர்வதேச ஆய்வு மாநாடும் கண்காட்சியும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கடுமையான முயற்சியின் பயனாக சித்த மருத்துவக் கண்காட்சியும் சர்வதேச ஆய்வு மாநாடும் நடத்தப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது. ஏகப்பட்ட பொதுமக்களும் மாணவர்களும் கண்காட்சியைப் பார்த்துப் பயன்பெற்றனர்.

சித்த மருத்துவத் துறையை நோக்கி மக்கள் வரத் தொடங்கிவிட்டனர் என்பதற்கு இஃது நல்லதொரு எடுத்துக்காட்டு.

ஆக, சித்த மருத்துவத் துறையை வளர்த்தெடுப்பதிலும் அதன் மிக உயர்ந்த பயனை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்குமாக பாடுபடும் அத்தனை பேருக்கும் இறைவனின் ஆசி நிச்சயம் கிடைக்கும்.

இது ஒரு புறம் இருக்க, சித்தமருத்துவக் கண்காட்சியைப் பார்க்கச் சென்ற நமக்கு எம் இனம் சார்ந்த நினைப்பு கவலை தந்தது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இதைக்கூறும்போது சித்தமருத்துவக் கண்காட்சியில் ஏதேனும் குறைபாடு என்று யாரும் நினைத்து விடாதீர்கள்.

மாறாக யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் முஸ்லிம் சகோதரிகள் அதிகளவில் மாணவர்களாக இருப்பதைப் பார்த்தோம்.

சித்த மருத்துவத் துறையைக் கற்பதில் முஸ்லிம் மாணவர்கள் காட்டும் ஆர்வம் கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறை கைதடியில் இயங்குகின்ற போதிலும் மட்டக்களப்பு, அம்பாறை உள்ளிட்ட பல இடங்களில் இருந்து முஸ்லிம் பெண் பிள்ளைகள் இங்கு வந்து சித்த மருத்துவத் துறையைக் கற்று, சித்த மருத்துவப் பட்டதாரிகளாக வெளியேறவுள்ளனர் எனும்போது, சந்தர்ப்ப சூழலை முஸ்லிம் மக்கள் எந்தளவு தூரம் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பது புலனாகின்றது.

அதுதவிர, இவ்வாறு வெளியேறுகின்ற முஸ்லிம் சித்த மருத்துவப் பட்டதாரிகள் வடக்கு கிழக்கில் உள்ள சித்த வைத்திய நிலையங்களில் மருத்துவர்களாகக் கடமையாற்றப் போகின்றனர் என்பதும் தெரிந்த விடயம்.

அதேசமயம் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் கடந்து வந்து, சித்த மருத்துவத்தை முஸ்லிம் மாணவிகள் கற்கின்றனர் என்பதற்குள்; சித்த மருத்துவத்துக்கு அவர்கள் கொடுக்கின்ற முன்னுரிமை, அதற்கான சமூக கௌரவம், முஸ்லிம் மக்கள் மத்தியில் சித்த மருத்துவத்துக்கான வரவேற்பு, வேலைவாய்ப்பு என ஏகப்பட்ட விடயங்கள் உள்ளடங்கியிருப்பது உணரப்பட வேண்டியது.

இந்த விடயங்களை நினைத்தபோது எங்கள் தமிழ்ப் பிள்ளைகள் சித்த மருத்துவம் என்றால் அதனைக் குறைத்து மதிப்பிடுவது, சித்த மருத்துவமோ படிக்கிறீர்கள் என்று எங்கள் மக்கள் ஏளனக் கேள்வி கேட்பது, சித்த மருத்துவத்தின் பெறுமதியை அறியாதிருப்பது என்ற விடயங்களால் எங்கள் பிள்ளைகள் சித்த மருத்துவத் துறைக்கு விண்ணப்பிக்காமல் விட்டுவிடுகின்றனர்.

ஆக, எங்களை நாங்களே தாழ்வுபடுத்திக் கொண்டு – எங்களை நாங்களே குறைத்துக் கொண்டு எல்லாவற்றையும் விட்டுவிலகி நடுத்தெருவில் நிற்க;

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் தமதாக்கிக் கொண்டனர்.

என்ன செய்வது எங்கள் இனம் இதுபற்றி எப்போதுதான் உணரப்போகிறதோ இறைவா!

# வடக்கு மாகாண தொண்டராசிரியர்களில் 182 பேரின் நியமனம் உறுதியாகிவிட்டது

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொண்டராசிரியர்களில் 182 பேருக்கு ஏற்கெனவே நியமனம் உறுதி செய்யப்பட்டு விட்டது. ஆகவே தங்களது நியமனம் தொடர்பாக அவர்கள் எந்த அச்சமும் கொள்ள தேவையில்லை. ஒட்டுமொத்த தொண்டராசிரியர்களுக்கும் நியமனம் கிடைக்க வேண்டும் என்ற காரணத்தாலேயே 182 தொண்டர் ஆசிரியர்களின் நியமனக்கடிதங்கள் வழங்கப்படாமலிருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மேற்படி விடயம் தொடர்பில் உறுப்பினர் அயூப் அஸ்மின் கேள்விக்குட்படுத்தியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொண்டராசிரியர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படுவதாக இருந்தது. எனினும் 182 பேருக்கே முதலில் வழங்கப்படுவது என மத்திய அரசால் தீர்மானிக்கப்பட்டது. நியமனம் கிடைக்காத ஏனையோருக்கு வரவு பதிவேடு இல்லை. இதன் காரணத்தால் அவர்களுக்கு எப்போதுமே நியமனம் வழங்கப்படாமல் போகலாம் என்ற அச்சம் தோன்றியது.

இதன் காரணமாக ஒட்டுமொத்த தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஒன்றாக நியமனம் வழங்கப்பட வேண்டும். அதுவரை இந்த 182 பேரினது நிரந்தர நியமனத்தை நிறுத்தி வைக்குமாறு வடக்கு மாகாண சபையால் கோரப்பட்டது. அதனை அடுத்து நியமன கடிதங்கள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது.

எனினும் நிறுத்தி வைக்கப்பட்ட 182 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமன கடிதங்கள்தான் வழங்கப்படவில்லை. ஆனால் நிரந்தர நியமனங்கள் நிறுத்தப்படவில்லை. அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் நியமனம் கிடைத்தவுடன் நியமன கடிதங்கள் வழங்கப்படும் என்றார். (ம-4)

# மகேந்திரனை ஒப்படைக்குமாறு சிங்கப்பூரிடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுக்க வேண்டும்

## கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை ஒப்படைக்குமாறு ஜனாதிபதி அல்லது வெளிவிவகார அமைச்சர் 24 மணி நேரத்திற்குள் சிங்கப்பூர் அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுக்க வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

அவ் எதிர்க்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறிமோசடி இடம்பெற்று இன்று மூன்று வருடங்களாகின்றன. நாடு சுதந்திரமடைந்த பின்னர் அரசாங்க அனுசரணையில் இடம்பெற்ற பாரிய மோசடியாக அது உள்ளது. எனினும் குறித்த மோசடியின் பிரதான சூத்திரதாரியான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கண்டுபிடிக்க முடியவில்லையென இரகசிய பொலிஸார் நீதிமன்றிற்குத் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. சிங்கப்பூரில் வசித்த வீட்டில் அவர் தற்போது இல்லை எனவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

# முச்சக்கரவண்டி மோதியதில் இளைஞன் ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

நடந்து சென்று கொண்டிருந்த இளைஞர் மீது முச்சக்கரவண்டி மோதியதில் படுகாயங்களுக்குள்ளான இளைஞர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் மூத்த விநாயகர் கோவிலடி, விழுந்தாலடி எனும் இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த சிவரஞ்சன் அருள்தர்சன் (வயது-26) என்பவரே படுகாயங்களுக்குள்ளானார்.

நடந்து வந்த இளைஞனை பின்னே வந்த முச்சக்கரவண்டி மோதியதாகவும் படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். முச்சக்கரவண்டி சாரதியைக் கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பக்குவம் பெற்றால் துன்பமில்லை




- மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண்ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத்தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- பரோபகாரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும். இறைவனுடைய நியதியில். உலகில் உள்ள அனைத்து விடயங்களுக்கும் இடமுண்டு. அதனால், நம்முடைய கொள்கை தான் சிறந்தது. மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது. பிறருக்குப் போதிப்பது சுலபமல்ல.
- ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும்.
- மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன. அதனால் தெய்வீகப் படங்களை, நாம் இருக்குமிடத்தில் எப்போது கண்ணில் படும் வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நம் மனதில் அருள் உணர்வு உதிக்கத் தொடங்கும்.
- செடி பெரிய மரமான பிறகு, அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையைக் கூட அதில் கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகி விடும். அதைப் போல பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விஷயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை.

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில வேம்பிராய், மந்துவில், சின்னச்சந்தையடி, சிறுப்பிட்டி, நீர்வேலி, ஏ9 வீதியில் (புங்கங்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக் கந்தோர் வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வீட்டின் அறைகள் எந்தத் திசையில் அமைய வேண்டும்?**

பூஜை அறை- மேற்கு, வடகிழக்கு
உணவு அறை- தெற்குத்திசை
படுக்கை அறை- மேற்கு, வடகிழக்கு
கல்வி, செல்வம்- தென்மேற்கு திசை
அலுவலக அறை- வடமேற்கு திசை
சேமிப்பு அறை- வடக்குத் திசை
குளியல் அறை- கிழக்குத் திசை
சமையல் அறை- தென்கிழக்கு திசை

**மனையின் நீள, அகல அளவுகள் எப்படி அமைய வேண்டும்?**

6, 8, 10, 11, 16, 17, 20, 21, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 39, 40, 42,45, 52,56, 60,63, 64,66, 68,70, 71,72,73,74, 77, 79, 80, 84,85, 87, 88, 89, 91, 92,95, 97,99,100,101, 102 106, 107, 108, 109, 110, 111, 112, 115, 116, 117, 119

(தொடரும்)

# இதய அஞ்சலி



தோற்றம்
12 - 12 - 1931

மறைவு
27 - 02 - 2018

திருமதி

## இராசம்மா நாகலிங்கம்

செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாராகிய திருமதி நாகலிங்கம் இராசம்மா அவர்கள் 27.02.2018 அன்று இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயருறும் விவசாய சம்மேளனமும் மக்களும்
J/220 அளவெட்டி மேற்கு.

(C-1736)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் திருக்கேஸ்வரன்

(அதிபர், யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்)



சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பை சேர்ந்த சுப்பிரமணியம் திருக்கேஸ்வரன் நேற்று (27.02.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் நவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் நமசிவாயம் லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் ரேகா (உயர்தர மாணவி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரக் கல்லூரி), மித்திரன் (உயர்தர மாணவர், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை), உமைபாலா (மாணவர், சில்லாலை றோ.க.த. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனேஸ்வரி, நகுலேஸ்வரி, செந்தாமரை, சிவனேசராசன் (ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), யாதவன் (மதுவரி உத்தியோகத்தர், சங்கானை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்மலிங்கம், வசந்தமலர், சுகிர்தமலர், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2018) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (3057)

077 435 1909, 077 615 1783 தகவல் : குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## அருணாசலம் மாணிக்கவாசகர்

(ஓய்வுபெற்ற அதிபர்-
யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை)

தோற்றம்:- 08.12.1942
மறைவு 26.02.2018

யாழ்ப்பாணம், பருத்தித்துறை புலோலி மேற்கு, தென்னிங்கவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் மாணிக்கவாசகர் அவர்கள் 26.02.2018 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், தேவகாந்தன் (UK), தர்சினி (அமரர்), வாசுகி, இரமணன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேசவன், சிவகௌரி, சுபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவினியா, தனனியா, பரணியா, லிசானி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2018) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சுப்பர்மடம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பசிட்டி, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி-1737)

தகவல்:-
குடும்பத்தினர்

## மருத்துவ பீட மாணவன்...

குளத்தை சேர்ந்த இமானுவேல் சாமுவேல் (வயது 26) என்பவரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டவராவார்

குறித்த மாணவன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி வருடத்தில் கல்விகற்று வருகிறார். இவர் கடந்த இரு வருடங்களாக தனது தாய் தந்தையுடன் யாழ்ப்பாணம் கந்தர் மட பகுதியில் வசித்து வருகிறார்.

இவர் கடந்த நான்கு வருடங்களும் சிறப்பாக கல்வி கற்று வந்த நிலையில் இறுதி வருடத்தில் சற்று மன அழுத்தத்துக்கு உள்ளாகிய நிலையில் இருந்துள்ளார். கடந்த ஒரு மாத காலமாக வகுப்புக்களுக்கு செல்லாமல் வீட்டில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் இவரது தாயார் வவுனியாவுக்கு சென்ற நிலையில் நேற்று தந்தையிடம் தேநீர் வாங்கி குடித்துவிட்டு அறையில் இருந்துள்ளார். முற்பகல் 11 மணியளவில் தந்தையார் மகனின் அறையை பார்த்த போது இவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## யாழ்.பஸ் நிலையம்...

கொல்லப்பட்டுவருகின்றனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட, காயமடைந்த குழந்தைகளின் புகைப்படங்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாக வைரலாகி உலகம் முழுவதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. 2009இல் இதேபோன்ற அழிவை ஈழத்தமிழினமும் சந்தித்திருந்தது.இந்த நிலையிலேயே அழிவை எதிர்கொண்ட இனம் என்ற வகையில் சிரிய மக்களுக்காக ஈழத்தமிழ் இளைஞர்கள் குரல் கொடுக்க ஆயத்தமாகியுள்ளனர்.

இந்த நிலையில் நாளை முதலாம் திகதி காலை 10 மணியளவில் யாழ்.பிரதான பஸ் நிலையம் முன்பாக கண்டன போராட்டம் நடைபெறவுள்ளது. (ம-4.9)

## வடக்கு மாகாண சபை...

யின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்றது. இந்த அமர்வில் யாழ்.மாநகர சபைத்தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட்டுக்காக நேற்றைய தினம் சபாரட்ணம் குகதாஸ் உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார்.

இதன்போது அவர் தனது கன்னியுரையில், இறுதிப் போரில் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசம் நோக்கி சென்று கொண்டிருக்கும் போது கூட இராணுவம் மக்கள் மீது சூடு நடத்தி கொன்றது. இறுதி போரில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டார்கள். பின்னர் எங்களை முகாம்களில் தடுத்து வைத்து சித்திரவதை செய்தார்கள்.

ஒரு நாளைக்கு குடிப்பதற்கு 2 லீற்றர் தண்ணீரும், குளிப்பதற்கு 5 லீற்றர் தண்ணீரும் தந்தார்கள். உணவு ஒழுங்காக தரவில்லை. உணவு இல்லாமல் கூட சிலர் உயிரிழந்தார்கள். இவ்வாறு எமது துன்பங்களுக்கும் இராணுவத்தின் படுகொலைகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

இவற்றை நாங்கள் ஒருபோதும் மறக்கவும் போவதில்லை, மன்னிக்கவும் போவதில்லை. இலங்கை அரசு ஐ.நாவில் மழுப்பல் பதிலை கூறி பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்து வருகின்றது. இந்த சூழ்நிலையில் நாங்கள் சரியான முறையில் செயற்படாவிட்டால் அது வரலாற்று தவறாகிவிடும்.

ஆகவே வடக்கு மாகாண முதலமைச்சர் எமது அரசியல் தலைவர்களை ஒன்றிணைத்து இதற்காக செயற்பட வேண்டும் என்றார். இவரது உரை இறுதி போரில் நடைபெற்ற படுகொலைகளுக்கு சாட்சியாக காணப்படுவதால் உரையை ஐ.நா மனித உரிமை பேரவைக்கு அனுப்பிவைக்குமாறு அவைத்தலைவருக்கு முதலமைச்சர் அறிவுறுத்தினார். (ம-4)

## ரவிகரனை விசாரணை...

ளனர். முன்னதாக மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை விசாரணைக்காக அழைத்த நிலையிலேயே ரவிகரன் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்.

வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள மக்களுடைய காணிகளை நிரந்தரமாக கடற்படைக்காக சுவீகரிக்கும் முயற்சி சில தினங்களுக்கு முன்னர் ஐந்தாவது தடவையாக நடைபெற்றது.

இதன்போது காணி உரிமையாளர்கள் திரண்டு காணியை அளவிட வந்தவர்களை வழிமறித்து போராட்டம் நடத்தியிருந்தனர். இந்த போராட்டத்தில் வடக்கு மகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் மக்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த போராட்டம் குறித்து விசாரணை செய்வதற்காகவே முல்லைத்தீவு பொலிஸார் குறித்த இருவரையும் எதிர்வரும் முதலாம் திகதி வருமாறு அழைத்துள்ளனர். (ம-4.281)

## இலங்கை குறித்து...

இலங்கை பிரதிநிதிகள் பாதிக்கப்பட்டோரின் பிரதிநிதிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

அந்தவகையில் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென்றல் அமைப்பு இலங்கை தொடர்பில் 11ஆவது இலக்க அறையில் ஒரு உபகுழுக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. அதேபோன்று ஏ.பி.சி. தமிழ் ஒலி என்ற அமைப்பு 21 ஆவது இலக்க அறையில் இலங்கை விவகாரம் தொடர்பில் விசேட உபகுழுக்கூட்டத்தை நடத்தவுள்ளது.

அதேபோன்று 5ஆம் திகதி அச்சுறுத்தப்பட்ட மக்களின் அமைப்பு ஒரு உபகுழுக் கூட்டத்தை நடத்தவுள்ளது. ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் 22ஆம் இலக்க அறையில் இந்த உபகுழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. (ம)

## இளைஞன் ஒருவர்...

சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

குறித்த இளைஞனின் தாயார் காலை 8.00 மணியளவில் வேலைக்கு சென்ற சமயத்தில் தனிமையில் வீட்டில் இருந்த இளைஞரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். காலையில் சென்ற தாயார் மீண்டும் 12.30 மணியளவில் வீடு திரும்பிய சமயத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மகன் காணப்பட்டுள்ளார். அயலவரின் உதவியுடன் சடலம் கீழே இறக்கப்பட்டதுடன் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 28 வயதுடைய கலைச்செல்வன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். (ம-250)

## பிரதமர் ரணிலுக்கு...

வெளியிட்ட அவர், சிறிது காலத்திற்கு முன்னரே கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முயற்சி செய்திருந்தோம். எனினும் அது கைகூடவில்லை.

அவ்வாறான நிலையில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே அந்த முயற்சியில் களமிறங்கியுள்ளனர்.

அவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதனை ஆதரிக்க நாம் தயார்.

கூட்டு எதிர்க்கட்சியின் 53 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்றும் சீ.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம)

## மாவட்ட செயலகத்தில்...

ற்ற அரசாங்க அதிபர் முயற்சி செய்வது தொடர்பாக வெளியான செய்திகள் தொடர்பில் ப.சத்தியலிங்கத்தின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்திற்கு வருகின்ற பொதுமக்களுக்கான சேவையை திருப்தியுடன் அங்கு பணியாற்றும் அரசாங்க ஊழியர்கள் வழங்கினாலேயே போதும்.

அதுவே இறைவனுக்கு ஆற்றும் பெரும் தொண்டாகும். வவுனியா மாவட்டம் மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழும் மாவட்டமாகும். அதிலும் 80 வீதத்திற்கு மேலாக தமிழ்பேசும் இந்துக்கள் வாழும் மாவட்டமாகும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களிடையே ஏனையமதங்களின்மீது வெறுப்புணர்வை தூண்டும் செயற்பாடாக அமையும். இதனை அரசாங்க அதிபர் உடனடியாக கைவிடவேண்டுமென அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ரணிலுக்கு எதிரான...

கிய செவ்வியில் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மகிந்த ராஜபக்ஷ அணிகளும், ஐக்கிய தேசியக் கட்சியும் திருடுவதற்காகவே ஆட்சிக்கு வருகின்றார்களே தவிர மக்கள் சேவைக்காக வரவில்லை எனவும் தெரிவித்தார். (ம)

## தெரிவான உறுப்பினர்...

ண்டுள்ளது.

உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி கட்சியின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வட மாகாண சபை...

இலங்கையை ஒரு சர்வதேச நீதிப்பொறிமுறைமுன்முற்படுத்துமாறு ஐ.நா மனித உரிமை பேரவையிடம் கோரும் தீர்மானமொன்று வடக்கு மாகாண சபையில் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுகளுடனும் நிறைவேற்றப்பட்டு ஐ.நா மனிதவுரிமை ஆணையாளருக்கு அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற மாகாண சபையின் அமர்வில் குறித்த தீர்மானம் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் கொண்டுவரப்பட்டது.

2015 செப்ரெம்பரில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின் போது இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக் கூறுதல், மனித உரிமைகள் முதலியவற்றை ஊக்கப்படுத்தல் என்ற தலைப்பிலான தீர்மானம் இலக்கம் 30/1 இனுடைய இணை அனுசரணையாகவும் அதில் ஒப்பமிட்டதுமாக இலங்கை இருந்ததையும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டங்களையும் மீறுதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தது தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கென வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்கு தொடுநர்கள், விசாரணையாளர்கள் அடங்கலான பக்கச் சார்பற்ற சட்ட நெறி பொறியமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான கடப்பாடு நிலைக்குள் அது தன்னை உட்படுத்திக் கொண்டதையும் நினைவு கூர்ந்தது.

30/1 இலக்கத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எந்த ஒரு அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் எடுக்க தவறி விட்டிருப்பதோடு அரசினுடைய ஜனாதிபதி பிரதமர் மற்றும் அரசாங்க முதுநிலை உறுப்பினர்கள் தாங்கள் இந்த தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று தெளிவாகவும் ஆணித்தரமாகவும் வெளிப்படுத்தி இருப்பதையும் அழுத்தமாக தெரிவிப்பதோடு.

ஒரு சமத்துவமான அரசியல் தீர்வை கண்டு கொள்வதற்கான எந்த ஒரு மனப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதிலிருந்தும் தவறியிருப்பது மட்டுமல்லாமல் சிங்கள அரசினுடைய ஒடுக்கு முறை மனப்போக்கை எடுத்துக்காட்டும் விதத்திலே தமிழ் மக்கள் உள்ளிட்ட பௌத்தர்கள் அல்லாத மக்களை பௌத்தத்திற்கு முதலிடம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இப்போதும் வலியுறுத்துவதையும் அக்கறையுடன் கவனத்தில் கொண்டு.

இலங்கையின் வட மாகாண சபையானது பின்வருமாறு தீர்மானம் எடுக்கிறது.

இலங்கையானது தானே ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளை நடைமுறைப்படுத்த மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானம் 30/1 இனை நடைமுறைப்படுத்த இயலாமல் அல்லது விரும்பாமல் இருப்பதையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் 2018ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதிய வருடாந்த அறிக்கையின் முடிவுரை ஏ:52 கூறுவதான இலங்கையின் பொறுப்புக் கூறுதல் மற்றும நல்லிணக்கம் முதலியவற்றின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் திருப்புமுனை வகிபாகத்தை மேற்கொள்ளும்படி மனித உரிமை ஆணையகத்தை உயர்ஸ்தானிகர் தூண்டுகிறார் அத்தோடு பொறுப்புக் கூறுதலின் வளர்ச்சிக்கு துணை நிற்கக் கூடியவையான உலகளாவிய விசாரணை அதிகாரத்தை பிரயோகித்தல் உள்ளிட்ட வேறு வழிகளை ஆராயும்படி உறுப்பு நாடுகளை அழைக்கிறது என்பதையும் கருத்திலெடுத்துள்ள இந்த சபையானது இந்த பிரச்சினையை ஐக்கிய நாடுகளின் தலைமையிலான ஒரு சர்வதேச சட்ட நெறிப் பொறியமைப்புக்கு முற்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொள்கிறது.

தமிழ் மக்கள் இலங்கையில் இணைந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமது மரபு வழி தாயகத்தை கொண்டிருக்கும் ஒரு மக்கள் இனம் என்பதையும், அவர்கள் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள் என்பதையும் கண்டுணர்ந்திருக்கும் இந்த சபையானது, ஒரு அரசியல் தீர்வுக்கான இணக்க நடுவராக செயற்படும்படி சர்வதேச சமூகத்தைக் குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் இந்தியாவைக் கேட்டுக் கொள்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## கணக்கெடுப்பில்...

பிழை நிகழ்ந்துள்ளது. அது திருத்தப்படுமிடத்து மூன்று கட்சிகள் இருநூறுக்கும் அதிகமான ஆசனங்களை இழக்கவேண்டிய நிலைவரும் என மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும குற்றம் சாட்டினார்.

பிழைகள் திருத்தப்பட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மேலும் 37 தொகுதிகள் கிடைக்கும். பிழைகளைத் திருத்தத் தவறுமிடத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நீதிமன்றம் செல்லும் என்றும் அவர் கூறினார். (ம)

## எதிர்வரும் இரண்டு...

தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டமாகவே மீண்டும் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ம)

## பிரதமருக்கு எதி...

ப்படுகின்றது.

ஐக்கியதேசிய கட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலர் மற்றும் பிரதியமைச்சர்கள் சிலர் உட்பட முன்னாள் அமைச்சர்கள், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அண்மையில் இவ்வாறான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும், குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதமருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதித்திட்டத்தினை பிரதமருக்கு தெரியப்படுத்தியுள்ளார். (ம)

## அமைச்சர்களின்...

ந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று காலை நடைபெற்றது.

இதன்போது சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களில் பெருமளவானோர் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதன் காரணமாக வெகு சொற்பமான அமைச்சர்களுடன் அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இது குறித்துக் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரிசாத் பதியுதீன், சுதந்திரக் கட்சியின் பல அமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ம)

## மார்ச் 20ஆம் திகதி...

டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Service
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | மேல்லை | சாவகச்சேரி | மிசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1720)

## கஞ்சா கடத்திய...

பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 200 கிராம் கஞ்சா போதைப் பொருளை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் (39 வயது) நாவற்குழி பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ம-9)

சைவம், அசைவம்
ஒடியல் கூழ்
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chickan - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

PSP Rent a Car

• Prius
• Premio
• Axio
• Nissan
• Alto
கார்கள் நாளாந்த, கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
0777852456, 0773777502

உடனடி வேலைவாய்ப்பு
எமது நிறுவனமானது இலங்கையில் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள் தேவை
• பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும் வழங்கப்படும்.
• பயிற்சியின் போது 15,000/= பின் 40,000/=
• வயதெல்லை 18 - 35
• தங்குமிட வசதிகள் உண்டு
தொடர்பு: 077 408 3273
(3056)

டுபாய் வேலைவாய்ப்பு
நீர்த்தடுப்பு வேலைத்திட்ட தொழிலாளர்
சவுதி - மேசன், பிளம்பர், காபென்ரர், பெயின்ரர், வெல்டர், டிரைவர், லேபறர், கிளீனர்
குவைத் - ஹொட்டேல் ரூம் அட்டென்டன்ட்
விபரங்களுக்கு 0777 324 004
TGL Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222
SIKARAM ACADEMY 221 - 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே: 021 - 222 00 11
(சி-1725)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
021 5674145
077 2931062
(சி-7545)

## இந்தி...

பட்ட விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இந்தியா நோக்கிச் சென்ற மகிந்த ராஜபக்ஷ.

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில்விஷேட வழிபாடு ஒன்றினை மேற்கொள்வதற்காகவே அவர் இந்திய விஜயத்தினை மேற்கொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. (ம)

## முன்னா...

மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த அழைப்புக்கு ஏற்ப நேற்று காலை 9.30 மணிக்கு ஆணைக்குழுவுக்கு வருகை தந்த முன்னாள் நிதி அமைச்சர் வாக்குமூலம் வழங்கிய பின்னர் பிற்பகல் 1.30மணிக்குஆணைக் குழுவிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார். (ம)

## துயர் பகிர்கின்றோம்



திருமதி நாகலிங்கம் இராசம்மா

எமது கல்லூரியின் தமிழ்ப் பாட ஆசிரியர் திருமதி ம.முருகமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார் திருமதி நாகலிங்கம் இராசம்மா அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாமும் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

(சி-1735)

கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு
யமஹா வழங்கும் மாபெரும் வாகன சந்தை 2018
எவ்வகையான உங்கள் பழைய மோட்டார் சைக்கிளையும் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு உரிமையாளர் ஆகுங்கள்.
பழையதை கொடுத்து புதியதை எடுத்து செல்லுங்கள்

கிளிநொச்சி டிப்போ சந்தி அருகாமை
மார்ச் 02,03,04
021 228 5253
071 315 9891
முல்லைத்தீவு டிஜிற்றல் யமஹா காட்சியறை முன்றலில்
மார்ச் 09,10,11
077 779 5800
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
Yamaha Garden
No.31, A9 Road,
Karadippokku,
Kilinochchi.
077 755 5115
Digital Electronics
Main Street,
Mullaitivu.
077 662 3824
எம்மிடம் லீசிங் மூலம் பெற்றுக் கொள்பவர்களுக்கு 15 லீற்றர் பெற்றோல், SLS ஹெல்மற்-01 இலவசம்
(சி-1729)

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L 2018 மாணவர்களுக்குரிய பொறியியல் தொழில்நுட்ப பிரிவு புள்ளிகள்

| Rank | பெயர் | புள்ளிகள் | பாடசாலை |
|---|---|---|---|
| 01 | பிரவினன் | 78 | யா/வசாவிளான் ம. க |
| 02 | அஜந்தன் | 75 | யா/வசாவிளான் ம. க |
| 03 | துவாரகன் | 75 | யா/வசாவிளான் ம. க |
| 04 | சசிகரன் | 73 | யா/இந்துக் கல்லூரி |
| 05 | விசரதன் | 70 | யா/மத்திய கல்லூரி |
| 06 | வியதன் | 70 | யா/பரியோவான் |
| 07 | பிரவினன் | 69 | யா/இந்துக் கல்லூரி |
| 08 | சஜிந்தன் | 69 | யா/மானிப்பாய் இ.க |

SFT, E-Tec, Bio-Tec, ICT 2018
மாணவர்களுக்குரிய 10 மாதிரி வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 077 017 5346
(சி-1738)

கடை வாடகைக்கு
யாழ். நகரின் கஸ்தூரியார் வீதியில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் 10X35 அடி முழுவதும் மாபிள் பதித்த கடை தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு.
தொடர்பு:
0774316197
(3048)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
➡ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
➡ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
சகல நாடுகளுக்குமான online visa விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்
3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
UK - 550/=
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 1000/=
திருமுருகன் கொம் நெற்
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு அருகாமையில் அமைந்துள்ளது) 077 755 4528
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNB வங்கிக்கு அருகாமையில்)
TCN EXPRESS 208A, Galle Road, Wellawatte.
(3053)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.